17660

13804



மஹாத்மா காந்தி

17660

மஹாத்மா

காந்தி



மஹாத்மா காந்தி: அக்டோபர் 2, 1869—ஜனவரி 30, 1948

மஹாத்மா
காந்தி

பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்,
செய்தி-ஒலிப்பரப்பு இலாகா,
இந்திய சர்க்கார்
(1956)

MAHATMA GANDHI
(TAMIL)

முதல் பதிப்பு 1956

தேச பிதாவின் வாழ்க்கை, சாதனைகளின் நினைவுச் சின்னமாக, உலகெங்கிலுமிருந்து சேகரிக்கப்பட்டுள்ள படங்களின் இத் தொகுதியைச் செய்தி-ஒலிபரப்பு இலாகா வெளியிட்டிருக்கிறது.

காந்திஜியைப் போன்ற ஒருவரது வாழ்க்கை சம்பந்தமான பல்லாயிரக் கணக்கான படங்களிலிருந்து சுமார் 300 படங்களைப் பொறுக்கி எடுப்பது சுலபமான காரியம் அல்ல. இதுபோன்ற படத் தொகுதி எதுவும் சம்பூர்ணமாக இருக்க முடியாது. எனினும் மஹாத்மா காந்தியைப் பற்றிய நூல் களஞ்சியத்தில் இதுவும் பயனுள்ள ஒரு பிரசுரமாக இருக்குமென நம்புகிறோம்.

இந்தக் கோவையைத் தயாரிக்கப் பலரும் உதவினர். விசேஷமாக, காகா சாஹேப் கலேல்கரும், ஸ்ரீ தேவதாஸ் காந்தியும் அளித்த உதவிக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம்.

பிரசுரித்தவர் : டைரக்டர், பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், செய்தி–ஒலிபரப்பு இலாகா, இந்திய சர்க்கார், பழைய செக்ரடேரியட், டில்லி–8.

முகவுரை

மஹாத்மா காந்தியின் எண்பது வருஷ வாழ்க்கையில் எத்தனையோ புதிய புதிய கட்டங்கள் உண்டு. அவரைப் போலப் பெருமையுள்ள வேறு எந்த மனிதரின் வாழ்க்கையிலும் இத்தனை கட்டங்கள் இருந்ததில்லை. நடுத்தர வர்க்க வைஷ்ணவக் குடும்பம் ஒன்றில் அவர் பிறந்தார். பள்ளியில் சேரும் வரை அதே சூழ்நிலையில் வளர்க்கப்பட்டார். அக்கால முறைப்படி கல்வி பயின்றார். அப்போதெல்லாம் தமது வர்க்கக் குழந்தைகளைப் போலவே உண்டார், உடைதரித்தார், வாழ்ந்தார். பின்னர் அவர் இங்கிலாந்துக்குப் படிக்கச் சென்றார். அந்நாட்டு நிலவரத்துக்கு ஏற்பத் தம் உடை மோஸ்தரை மாற்றிக் கொண்டார். ஆனால் உணவிலும், வேறு சில விஷயங்களிலும் அவர் இளம் பிராயத்தில் கற்றுக் கொண்ட போதனையிலிருந்து பிறழாமல் நடந்தார். பாரிஸ்டராகி இந்தியா திரும்பியதும், வக்கீல் தொழிலில் புதிதாகப் பிரவேசிக்கும் மற்ற எல்லோரையும்போலவே அவரும், சங்கடங்களை அனுபவித்தார். வக்கீல் என்ற முறையில் ஒரு கட்சிக்காரருக்கு உதவி செய்வதற்காக அவர் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றார். ஆயினும் அங்கு அவர் பல வருஷங்கள் தங்க வேண்டியதாயிற்று. ஏனெனில் அங்கு இந்தியர்களின் வாழ்க்கை நிலைமை, அவர்கள் நடத்தப்பட்ட முறை ஆகியவை காரணமாக அவர் இந்தியாவிற்குத் திரும்பாமல் அவர்களுக்குச் சேவை செய்ய வேண்டியது அவசியமாயிற்று. ஆட்சியாளருடன் நடத்திய போராட்டத்தின் விளைவாக அவருடைய வாழ்வில் மாபெறும் மாறுதல் ஏற்பட்டது. அவர் காவியுடை தரியாத சந்நியாசியாக இந்தியாவுக்குத் திரும்பினர். இந்தியா திரும்பியபின் அவர் பாரிஸ்டரைப் போல் உடுப்பு அணியவில்லை; பழைய கத்தியவார் பாணியிலேயே அணிந்தார். ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தியபோது அவரிடம் மற்றொரு மாறுதல் தோன்றியது. நாட்டின் பரம ஏழைக்குச் சமானமான வெளித்தோற்றத்தை அவருக்கு அளித்த மாறுதல் அது. அப்போது முதல், ஈசுவர நாம உச்சாரணத்துடன் உலகை நீத்தது வரை அவர் ஒற்றை வேஷ்டியையே உடுத்திவந்தார். 1931-ல் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கிய பொழுது கொடிய குளிரினால்கூட அவரை மாற்ற முடியவில்லை. இவ்விதம் அவரை வாழ்க்கையின் பல்வேறு கட்டங்களில், சித்திரத்தில், பார்ப்பது மிகக் கவர்ச்சியாகவும் அறிவூட்டுவதாகவும் இருக்கிறது. ஆனால் வெறும் உடை மாற்றங்கள் மாத்திரமன்றி அவருக்கே உரிய அலாதித் தோற்றங்களும், அவரது ஆத்ம சொரூபத்தின் புறக்காட்சிகளும் கவனத்தை ஈர்க்கின்றன. இப்புத்தகத்தில் உள்ள போட்டோக்களில் இவற்றை யெல்லாம் காணலாம். அவரது ஜீவியம், உபதேசங்கள் பற்றி எவ்வளவோ எழுதப்பட்டிருக்கிறது, இன்னும் எழுதப்படுகிறது. அவரைப் பற்றி அவரும் மற்றவர்களும் எழுதிய, எழுதுகின்ற விஷயங்களுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் அவரது வாழ்க்கைச் சித்திரங்கள்.

ஆகவே அவருக்குப் பணிவார்ந்த அஞ்சலியாக, இந்திய அரசாங்க செய்தி-ஒலி பரப்பு இலாகா வெளியிட்டுள்ள இப்பிரசுரத்தை வரவேற்கிறேன்.

ராஷ்டிரபதி பவனம்,
புது டில்லி,
ஜனவரி 20, 1954.

ராஜேந்திர பிரஸாத்

முன்னுரை

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

உலகத்தில் பலர் பல பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். ஆனால் காந்தி மகானைப் போல், அவர் செய்த அளவில், தனக்கென்று அல்லாமல் பிறருடைய நன்மைக்கான காரியங்களை ஆராய்ந்து தீர்மானித்து, அவற்றைத் தருமத்துக்கு மாறான முறைகளைக் கையாளாமல் அற வழியிலேயே நிறைவேற்றியவர் இந்த யுகத்தில் வேறு யாரும் இல்லை.

காந்தி மகான் ஜனித்த காலத்தில், நமது நாட்டில் பிரிட்டிஷ் ஆதிக்கம் வேரூன்றிப்போயிருந்தது. காரணம், 1857-ம் ஆண்டில் சிப்பாய்க் கலகமாக மூண்ட கிளர்ச்சி வெற்றி பெறவில்லை. அதுவரையில் இந்தியாவில் பிரிட்டிஷாரின் போக்கானது,குறியொன்றும் இல்லாத நடவடிக்கையாக இருந்தது. அது, இந்தச் சிப்பாய்க் கலகத்தின் விளைவாகத் திட்டவட்டமான ஒரு ராஜ்ய ஆதிக்கமாக உருவெடுத்து விட்டது. கூடவே, அந்நிய ஆக்கிரமிப்பைக் கண்டு மக்களின் உள்ளம் கொதிப்படைவதற்குப் பதிலாக, ஆங்கிலேயரைக் குரு ஸ்தானத்தில் வைத்து மதித்துப் போற்றி, அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல முயலும் ஆங்கிலம் படித்த கூட்டம் ஒன்று நாட்டில் முளைத்து வளர்ந்தது. ராஜீயத் துறையில் அடிமைப்பட்டுப்போனதுடன்,நாட்டின் பண்பாடும் அறிவுமே அந்நியர் வசம் ஆகிவிட்டன. ஆகவே, பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவில் சாசுவதமாக நிலைபெற்றுப் போவதற்கு வகை ஏற்பட்டுவிட்டது. இந்தச் சூழ்நிலையில் காந்திஜி தோன்றினார்.

அவர் வாழ்க்கை முடிந்துபோய், இந்திய சமூகம் துயரத்தில் ஆழ்ந்தபோது, இந்தியா முழுச் சுதந்திரப் பதவிபெற்ற ஒரு நாடாகியிருந்ததை நாம் கண்டோம். அவருடைய ஆயுள் காலத்திற்குள் உரிமை இழந்திருந்த மக்கள் சமூகம் பூரண சுதந்திரம் பெற்றது. வாயில்லாப் பூச்சிகளாக உழன்ற சமூகம் குரல் பெற்றது. ஆயுதமற்ற மக்கள் சுதந்திரப் போரில்வெற்றி அடைந்து,உலகத்துக்கே பயன் படுமாறு ஒரு புது சக்தியைத் தோற்றுவித்துக் காட்டினர். இந்தப் புதிய சக்தியின் அதிசய வரலாறே காந்தியின் வாழ்க்கை வரலாறும் ஆகும். ஆயுதம் ஏதும் இன்றி வெற்றியடையும் ஆன்ம சக்தியை உண்டாக்கி நிரூபித்தார்.

அவர் காலத்திற்கு முன் ராஜீயத் துறையிலும், சமயத் துறைகளிலும் தோன்றியிருந்த உணர்ச்சிகளிலும் இயக்கங்களிலும், அரசியல் சுதந்திரப் போருக்கு வேண்டிய சக்தியைக் காந்தி தம் அருட்பிரசாத மேதையினால் திரட்டி ஒருமுகப்படுத்தினார். அணையாத சுதந்திர ஆக்ரகம் கொண்ட ஒரு அணிவகுப்பைத் தோற்றுவித்தார். பல காங்கிரஸ் தலைவர்களுடைய சேவைகளை அஸ்திவாரமாகக் கொண்டே, காந்திமகான் சுதந்திர இயக்கத்தை நடத்தினார் என்பது உண்மையாயினும், அவருடைய தனிச் சிறப்பு என்னவென்றால் பாரத சுதந்திரப் புரட்சி தீவிர வேகத்துடன், ஆனால் ஆயுத பலமே இன்றித் தார்மிக முறையில் நடந்தது அவராலேதான். அவர் கையாண்ட தார்மிக முறையின் விசேஷத்தினால் இந்தியாவுக்கு அவர் செய்த பணி உலக மக்கட் பணியாகி விட்டது. குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கோ சமயத்திற்கோ, மக்கள் இனத்திற்கோ மட்டும் உரியதாக நின்று விடவில்லை அவருடைய சேவை. அவர் உழைத்தது இந்தியாவில், இந்திய மக்களிடையே யாயினும்,மக்கள் உலகம் முழுவதையுமே நோக்கிப் பணி செய்தார். அவர் பயனும் உலகம் முழுவதற்குமே பரவிற்று.

ஐயமற்ற தெய்வ பக்தியுடன் காந்திஜி தமது வாழ்க்கையை நடத்தினார். புதிய சமய சித்தாந்தம் எதையும் நிறுவி, பூசல்கள் விளைக்கவில்லை. கடவுளின் எண்ணற்ற கல்யாண குணங்களில் சத்தியத்தை அவர் வற்புறுத்தினார். சத்திய ரூபமான தெய்வத்தைக் காண்பதற்கு மார்க்கமும் காட்டினார். அது உண்மை, தளராத ஆர்வம், அன்பு, எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமை என்று காட்டி நிரூபித்தார்.

அவருடைய வாழ்க்கை மனித இனம் முழுவதற்கும் இன்னொரு பாடத்தையும் கற்பிக்கிறது; இளம்பிராயத்தில், எந்த அசாதாரண அற்புத சக்தியும் அவரிடம் காணப்படவில்லை. பின்னால் அவரிடம் நாம் கண்ட வைரம் பாய்ந்த சித்தமும் தீவிர அறவுணர்வும், அவருடைய உள்ளத்தின் அடித்தளத்தில் இருந்திருக்கலாம்.

ஆனல் அது இளம்பிராயத்தில் வெளிப்பட வில்லை. ஆகவே, யாரும் சத்திய முயற்சியினல் தம்மை உயர்த்திக் கொள்ளலாம் என்பதற்கு அவர் வாழ்க்கையிலிருந்து நம்பிக்கையும் ஊக்க மும் பெறலாம். அவரிடம் முக்கியமாக இருந் தது நன்மை எது, தீமை எது என்று பகுத்துக் காணும் ஐயந்திரிபற்ற உணர்வு; அதன்மேல், அதை ஒட்டிய தளரா முயற்சி.

இம் முயற்சியில், எந்தச் சாதாரண மனித னும் செய்யக்கூடிய வகையில், படிப்படியாக அடியெடுத்து வைத்தே அவர் நடந்துசென்ருர். கடைசியில், இம்முயற்சியின் வெற்றிச் சிகரத் தில் அவர் நின்றபோது, மனித சாதனையைக் கடந்து நிற்கும் தனிப் பிறவியாகவும் தோற்றம் அளித்தார். "இத்தகைய ஒரு மகான், நம்மைப் போலவே ஊனும் குருதியுமான மனிதன் ஒரு வன், இந்த அற்புத சாதனையோடு, இம்மண் ணிலே வாழ்ந்தான் என்பதை வருங்கால மக் கள் நம்பத் தயங்குவார்கள்" என்ருர் ஒரு மேனுட்டுப் புகழ்பெற்ற டெரியார்.

ஆயினும் சாதாரண மனிதன் இவ்வளவை யும் செய்தான் என்பதைக் கண்டோமல்லவா? இதனல் உண்டாகும் நம்பிக்கையும் ஊக்கமும் பாமர மக்களுக்கு மதிப்பற்ற ஒரு செல்வ மாகும்.

1921-ம் ஆண்டு வரையில் தமது சுயசரி தத்தை இம்மியளவும் உண்மைக்கு மாறுபடாத படி அவரே எழுதி வைத்திருக்கிருர். அறமும் அறிவும் ஒரு மனிதன் வாழ்க்கையில் எவ்வாறு மலர்கிறது என்பதை இந்தச் சுயசரித்திரத்தில் கண்டு உணரலாம்.

உலகத்துக்குப் பணி செய்த காந்தி மகான் நம்முடைய நாட்டில் பிறந்தவர் என்று நாம் அனைவரும் பெருமை கொண்டாடலாம். என் னுடைய இனத்தைச் சேர்ந்தவர் அவர் என்று சொல்லிக் கொள்ளும் உரிமை பாரத நாட்டில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உண்டு.

எந்த விஷயத்தில் உண்மையைக் காண வேண்டுமானலும், ஆராயாமலே முன் கூட்டி ஒரு அபிப்பிராயத்தை மனத்தில் பதிய வைத் துக் கொண்டு சிக்கல் படுத்திக் கொள்ளாமல், பளிங்கு போன்ற சுத்த மேதையை வைத்து விஷயங்களைச் சோதித்து உண்மையை நாடு வார் அவர். திரைகளும் தடங்கல்களும் உண் டாக்கிக் கொள்ளாமல் உண்மையை நேராகப் பார்ப்பார். இது அவருடைய தனிச் சிறப்பு. இப்படித்தேடி உண்மையைக் கண்டபின் அந்த உண்மையை ஒட்டி, காரியாம்சத்தில் என்ன செய்து முடிக்க வேண்டும் என்பதைத் தீர் மானிப்பார். தீர்மானத்தை நிறைவேற்றுவதற் குத் தடைகளும் தடங்கல்களும் பல இருக்கும். அவற்றைத் தாண்டுவதில் துன்பங்களும் கஷ் டங்களும் ஏற்படும். அதற்காகப் பயப்படாமல் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வதே வெற் றிக்கு வழி என்று உணர்ந்து, மகிழ்ச்சியுடன் துன்பத்தில் இன்பமும் வெற்றியும் காண்பார். இந்த முறையைப் பிறருக்கும் உபதேசித்தார். முறையில் வெற்றி நிச்சயம் என்பதையும் நிரூ பித்தார்.

மொழி பேதங்களையும் மதபேதங்களையும் கண்டு கவலைப்பட்டுப் பயந்து பாரத நாட்டுக்கு உய்வில்லை என்று கருதி வந்தோம். பேதங் களைக் கண்டு கலங்க வேண்டியதில்லை, எல்லா மொழிகளுக்கும் எல்லாச் சமயங்களுக்கும் சம கௌரவம் உண்டு, பிற மொழியை மதித்தே தன்னுடைய மொழிக்குப் பக்தி செலுத்தலாம், சமயங்கள் எல்லாம் ஒரே தெய்வத்தை அடை யும் வழிகளாகும், மற்ற மார்க்கங்களும் நாம் வழிபடும் தெய்வத்தினிடமே போய்ச் சேரும் என்ற மகத்தான உண்மையைப் போதித்து, தம் வாழ்க்கையில் அந்த விசாலமான கருத் தையே செலுத்தி வாழ்ந்து காட்டினர். அதன் பயனகப் பாரத நாடு விடுதலை பெற்றது.

ஒரு மதத்தில் பிறந்து வாழ்ந்து பழக்கப் பட்டவர், வேறு மதத்தில் சேருவதும் அப் படிச் சேர்க்கப் பிறர் விரும்புவதும் மடமை, தருமத்துக்குக் குந்தகமாகும், அவனவன் தன் தன் மதத்தில் தரும வாழ்க்கை நடத்தும்படி நாம் உதவ வேண்டுமே அல்லாமல், அவனை அவனுடைய குடும்பத்தினின்றும் உறவினர் களிடமிருந்தும் பிரித்துக் குழப்பம் உண்டாக்க லாகாது என்று போதித்துப் பிரசாரம் செய்து, மத மாற்றுதலில் தீவிர வேலை செய்து வந்தவர் களுக்கு நற்புத்தி புகட்டினர். வெற்றிகர மாகவே இதைச் சாதித்தார். மதமாற்றப் பிரசாரங்கள் அவர் காலத்துக்குப் பிறகு மிகவும் குறைந்து போயின. தேசத்தில் சாந்தி ஏற் பட்டது.

'நான் சீர்திருத்தக்காரன். ஆனல் எந்த ஒரு நவீன சம்பிரதாயத்தையும் தோற்றுவிக்க நான் விரும்பவில்லை' என்று விளக்கமாகவும் ஊர்ஜிதமாகவும் கூறி வந்தார். ஹிந்து சம்பிர தாயம் மிக விசாலமானது; அதில் நாம் எல்லாத் திருத்தங்களையும் செய்துகொண்டு சுகமாக இருக்கலாம்; அதற்காகப் புது மார்க்க மாவது மதமாவது சம்பிரதாயமாவது நாம் உண்டாக்கிக் கொள்ள வேண்டியதில்லை என்று

17660

ஆயுள் முழுவதும் தம்முடைய சமய விளக்கத்தைச் செய்து வந்தார். மற்றச் சீர்திருத்தக்காரர்களுக்கும் காந்தி மகானுக்கும் இது ஒரு பெரிய வித்தியாசம். ஆயினும் 'காந்தீயம்' என்று ஒரு சொல் பிரயோகத்தில் வந்துவிட்டது. அந்தச் சொல்லின் பொருள் மேற்கண்டதைத் தவிர வேறல்ல. அன்பும் சத்தியமும் அகிம்சையும் ஹிந்து மதத்துக்குப் புதிதல்ல. இவற்றுக்குக் காந்தி மகான் அடிக்கோடு இட்டு அழுத்தம் கொடுத்தார். அதைத்தான் காந்தீயம் என்று சொல்லி வருகிறார்கள். 'காந்தீயம்' என்பது ஒரு புதிய சம்பிரதாயம் அல்ல. "செய்யவேண்டிய காரியங்களைச் செய்; பசை கொள்ளாமல் செய். இதுவே சந்யாசம்" என்பது கண்ணன் போதித்த சாஸ்திரம். காந்திமகான் உபதேசித்த காந்தீயமும் இதுவே. இதைச் சாஸ்திரம் படித்தோர் கர்மயோகம் என்பார்கள். ஆயினும் காந்திஜியினுடைய மார்க்கம் பக்தி மார்க்கமே. தான் அடைந்த ஞானத்தையும் பயின்ற யோகத்தையும் தன்னுடைய சக்தியையுமே நம்பிச் சரணாகதி முறையை விட்டாரில்லை. அனைத்தும் உன்னுடையது என்று ஆண்டவனுக்குப் பணியையும் தன்னையும் அர்ப்பணம் செய்வதே பக்தி மார்க்கம். இதைத்தான் காந்திமகான் தானும் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் போதித்தார்.

தம்முடைய உபதேசங்களிலும் தம் செய்கைகளில் காட்டிய நிதரிசனத்திலும், அறம் வேறு உலக வியவகாரம் வேறு என்கிற மோசமான லோகாயதக் கருத்தை அகற்றித் தள்ளினார். அரசியல், தொழில், வியாபாரம் எல்லாமே தருமத்தோடு கலந்த விஷயங்கள்; அனைத்துக்கும் தருமத்தை உரை கல்லாக வைத்துக்கொள்ள வேண்டும்; கடவுள் பக்தியைப் பூஜைப் பண்டமாகத் தனித்து வைத்து அரசியல், வியாபாரம், தினசரி வாழ்க்கை இவைகளை லோகாயத முறையில் நடத்துவதில் பயனில்லை — இந்த உண்மை முன்னோர் சொன்னதே யாயினும், வழங்கி வந்த பொய்க் கருத்தைக் காந்தி மகான் ஐயமறக் கண்டித்துப் பொருளும் இன்பமும் அறத்தோடே கலந்ததாக இருக்கவேண்டும் என்பதை வற்புறுத்திப் போதித்தார். ஓரளவு ஜனங்கள் இதை உணர்ந்திருக்கிறார்கள்.

இதனுடன் இன்னொரு பழம் பொய்யையும் பொய்யென்று விளக்கி அகற்றினார். நல்லதென்று கருதிய ஒரு பயனை அடைவதற்காக அறம் வழுவிய முறைகளையும் கையாளலாம், குற்றமில்லை என்று உபதேசிக்கப்பட்டு வந்த கருத்து மிகவும் தீங்கு விளைவிக்கும் என்று விளக்கினார். முறை வேறு, பயன்வேறு அல்ல; இரண்டுமே தருமத்துக்கு விருத்தமாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு காரியமும் அறமா, அறம் வழுவியதா என்று விவேகத்துடன் பகுத்தறிந்து அறம் வழுவாத முறைகளையே கையாள வேண்டும். பயன் மட்டும் நல்லதாக வைத்துக் கொண்டு அதை அடைவதற்காக நாம் உபயோகப்படுத்தும் கரணங்களும் செய்யும் செயல்களும் எவ்வகையாயும் இருக்கலாம் என்று வெகு நாளாக ஒரு தவறான கொள்கையைப் பலர் அங்கிகரித்து வந்தார்கள். இது முற்றிலும் தவறு என்பதைக் காந்திஜி வற்புறுத்திச் சித்தாந்தம் செய்தார்.

அரசியல் துறையில் மகத்தான ஒரு புது நிலைமையை உலகத்துக்கே உண்டாக்கி நிலை பெறச் செய்துவிட்டார். எந்த ஜனசமூகத்தையும் அன்னிய நாட்டார் அடக்கி ஆள முடியாத நிலைமையை உண்டாக்கிவிட்டார். பாரத நாட்டில் மட்டிலுமல்ல, பாரத நாட்டில் நடந்த புரட்சியின் பலனாக உலகத்தில் எந்த ஜன சமுதாயத்தையும் அன்னியர் வந்து இனி அடக்கி ஆள முயற்சி செய்வதில் பயனில்லை என்று வல்லரசுகள் அனைத்தும் உணரும்படியான நிலைமையை ஏற்படுத்திவிட்டார். அடக்கி ஆளப்பட்ட பிரதேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாக விடுதலை அடைந்து வருகின்றன. அடக்கி ஆண்ட அன்னியர்கள் இனி வேண்டாம் என்று சந்தோஷமாகவே திரும்பிப் போகும் முறை ஏற்பட்டு விட்டது. இதற்கெல்லாம் காரணம்; எந்த ஜன சமூகமும் தன் சம்மதத்தைக் கொடுத்துத்தான் உண்மையில் அன்னிய ஆட்சிக்கு உட்பட்டு வருகிறது. சம்மதத்தை மறுத்துவிட்டால் அன்னிய ஆட்சி முடியாத காரியம். சம்மதத்தை மறுப்பதற்கு ஆயுதங்கள் வேண்டியதில்லை. இணங்காமல் இருப்பதே மறுப்பாகும். ஆனால் அப்படி மறுப்பதில் துன்பங்களைத் தாங்க வேண்டியது அவசியமாகும். துன்பத்தைத் தாங்கும் சக்தியும் பொறுமையும் திரட்டிக்கொள்ள வேண்டும். அடிமை நிலையைத் தீர்க்கும் யுத்தம் இதுவே. இந்த யுத்தத்தில் ஏற்படும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் பொறுத்துக் கொள்வதே வெற்றிக்கு வழி. கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்ட ஒவ்வொரு கட்டமும் மலையேறுவதற்கு ஒரு படியாகும். ஏறின ஒவ்வொரு படியும் சிரமம் தந்ததாயினும் கொடுமுடியை

நெருங்கினேமே என்கிற இன்பத்துடன் நம்பிக்கையும் தரும். இந்தியாவில் இதை நிரூபித்தாய்விட்டது. மற்ற நாடுகளில் இந்த உண்மையை ஆளப்பட்டவர்களும் ஆளும் அன்னிய சர்க்காரும் இரு பட்சத்தாருமே உணர்ந்துகொண்டு யுத்தம் இல்லாமலே சுதந்திர நிலைமை தோன்றி வருகிறது. இனி, ஒரு நாட்டார் இன்னொரு நாட்டாரை ஆள முடியாது என்கிற நியதி ஊர்ஜிதமாய் விட்டது. உலக சரித்திரத்தில் இது ஒரு புதிய அத்தியாயம். புது யுகதர்மம் என்றே சொல்லலாம் இந்த அத்தியாயத்துக்குக் காரணகர்த்தா நம்முடைய காந்தியாவார். காந்தி மகானை எதிர்த்த பிரிட்டிஷாரும் இந்தப் புது அத்தியாயத்துக்கு, வேறு ஒரு பொருளில், காரண கர்த்தா ஆவார்கள். உலகத்துக்கு அவர்களும் சரியான வழியைக் காட்டிவிட்டார்கள் அல்லவா?

ஒரு அவதார புருஷன் வந்து நாம் அழிந்து போகாமல் கைகொடுத்துத் தூக்கினன். பாதாளத்தில் அழுந்திய பூமியை மகாவிஷ்ணு வராகனுக வந்து தோண்டித் தூக்கி நிறுத்தினதைப் போல் என்றுல் மிகையாகாது. ஆனுல் அந்த அவதார புருஷன் உபதேசித்த உண்மைகளை மறந்தோ அல்லது கட்டிவைத்துப் புறக்கணித்தோ நடந்தோமானுல், அடைந்த சுதந்திரம் பொருளும் சுகமுமற்ற பிருடைச் சுரையாகப் போகும்.



1876

1886

1889

1900

1906



1909



1913

1914



1914

1915

1918

1920



1921



1924



1926



1928



1930



1931



1933



1935



1938



1939



1940



1942


1944


1945


1946


1946


1947


1948

1869-1914

(பிள்ளைப் பருவத்தில்) எனக்கு சங்கோஜம் மிகவும் அதிகம்; யாருடனும் கலந்து பழகுவதில்லை.

*　*　*

நான் பிழைப்புத்தேடுவதற்காகத் தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்றேன். ஆனால் ஈசுவர வேட்கையிலும் ஆத்ம பரிசோதனையிலும் அகப்பட்டுக் கொண்டேன்...சுயமரியாதையுள்ள இந்தியன் எவனுக்கும் தென் ஆப்பிரிக்காவில் இடம் இல்லை என்று கண்டுகொண்டேன். இந்த நிலைமையைச் சீர் திருத்தும் பணியில் மேன்மேலும் ஈடுபடலானேன்.



மகாத்மா பிறந்த வீடு—சௌராஷ்டிராவில், போபந்தரி
லுள்ள இந்த வீட்டில் 1869 அக்டோபர் 2உ அவர் பிறந்தார்

காந்திஜி பிறந்த அறை

காந்திஜியின் தந்தை கரம்சந்த் உத்தம்சந்த் காந்தி

ஏழு வயதில் காந்திஜி

ராஜ்கோட்டில்
காந்திஜியின் வீடு

காந்திஜியின் சகோதரி ரலியாத் பென்

சகோதரர் லக்ஷ்மிதாஸ் காந்தி

ராஜ்கோட் ஆரம்பப் பள்ளி

1886-ல் சகோதரர் லக்ஷ்மிதாஸுடன் காந்திஜி

லண்டனில் சைவபோஜன சங்க அங்கத்தினருடன் —1890

தென் ஆப்பிரிக்கா ஜொஹனஸ்பர்க்கில்
காந்திஜியும் அவரது காரியாலயச் சகாக்களும்





காந்திஜியின் கருத்தைக் கவர்ந்த அறிஞர்கள் டால்ஸ்டாய், ரஸ்கின், ரேய்சந்த்

நேட்டால் போனிக்ஸ் குடியேற்றத்தில
காந்திஜி, கஸ்தூரிபா, மற்ற சகாக்கள்—1906

(எதிரே) ஜொஹனஸ்பர்க்கில்
பாரிஸ்டர் காந்திஜி



ஸி. எப். ஆண்ட்ரூஸ், டபிள்யு. டபிள்யு.
பியர்ஸன் ஆகியோருடன் காந்திஜி

போயர் யுத்தத்தின்போது இந்திய
ஆம்புலன்ஸ் படையினருடன்—1899

ஜூலு கலகத்தின்போது இந்திய
"ஸ்டிரெச்சர்" படையுடன் காந்திஜி

அவ்விரு போர்களிலும் காந்திஜிக்கு
வழங்கப்பட்ட பதக்கங்கள்—1906

1912-ல் கோகலேயின் தென் ஆப்பிரிக்க விஜயத
தின்போது நேட்டால் உபசரிப்பில் காந்திஜி

தென் ஆப்பிரிக்காவில் சத்யாக்ரகி காந்திஜி

காந்திஜியும் கஸ்தூரிபாவும்; தென் ஆப்பிரிக்காவில் பி. கே நாயுடு குடும்பத்தாருடன்—1912

தென் ஆப்பிரிக்கா சத்தியாக்கிரகத்தின்போது; கால்லன்பக், குமாரி ஸ்லெஸீன் ஆகியோருடன் காந்திஜி நிலைமையை விவாதிக்கிறார்

தென் ஆப்பிரிக்காவில் காந்திஜியும் கஸ்தூரிபாவும்—1913

1915-1922

தனது அதர்மத்தைப் பாதுகாப்பதற்காக மேன்மேலும் அக்கிரமத்தில் அழுந்துகின்ற சர்க்காரிடம் நான் மரியாதையோ அபிமானமோ காட்டமுடியாது...நன்மையுடன் ஒத்துழைப்பது எவ்வாறு கடமையோ, அதேபோலத் தீமையுடன் ஒத்துழையாதிருப்பதும் கடமையாகும் எனக் கருதுகிறேன்.

1915-ல் காந்திஜி

கஸ்தூரிபா—1915-ல்

1915-ல் சென்னைக்கு முதன்முதலாக விஜயம் செய்தபோது
முகமத் யாகுப் ஹாஸன், ஜி. ஏ. நடேசன் ஆகியோருடன

1916-ல் கராச்சிக்கு முதலமுறை விஜயம் செய்த போது நடந்த நகர பொதுஜன வரவேற்பு

கராச்சி நகர மக்கள் காந்திஜியை ஊர்வலமாக
அழைத்துச் செல்லுதல்—1916

சபர்மதி ஆச்ரமத்தில் உள்ள ஹிருதயகுஞ்ச்—
இங்கு மகாத்மாஜியும் கஸ்தூரிபாவும் 1915 முதல்
1930 வரை வசித்தனர்

ஹிருதயகுஞ்சில் காந்திஜியின் அறை



1917-ல் காந்திஜியும் கஸதூரிபாவும்

காந்திக் குல்லா'யுடன் காந்திஜி





1921-ல் அஹமதாபாத் காங்கிரஸ்
கூட்டத்தில் காந்திஜி

டில்லியில 1921-ல் காந்திஜி 21 நாள் உண்ணுவிரதம
இருந்தபோது எடுத்த படம். அப்போது 6 வயதுச்
சிறுமியான இந்திரா காந்தி அருகில் இருக்கிறா



1923-1932

பல கிராமங்களில் எலும்புக்கூடான மனிதர்கள கண்கூடான சாட்சியமாக இருக்கிறுர்கள். பொய்யான வாதங்களாலோ செப்பிடுவித்தைக் கணக்குகளாலோ இதை மறைக்க முடியாது. இது மனித வர்க்கத்திற்கு எதிரான, சரித்திரத்திலேயே ஈடற்ற, குற்றமாகும். கடவுள் ஒருவர் இருப்பது உண்மையானுல், இங்கிலாந்தும் இந்திய நகர வாசிகளும் இதற்கு ஜவாப் சொல்லியாக வேண்டும்...அஹிம்சை மூலம் பிரிட்டிஷ் மக்களின் மனதை மாற்றி, இந்தியாவிற்கு அவர்கள் இழைத்துள்ள தீமையை உணரச் செய்ய வேண்டும்—அதுவே என் ஆசை. அவர்களுக்குத் தீங்கு இழைப்பது என் நோக்கம் அல்ல; எனது மக்களுக்குச் சேவை செய்வது போலவே அவர்களுக்கும் சேவை செய்ய விரும்புகிறேன்.

1924-ல் பெல்காம் காங்கிரஸிற்குத்
தலைமை வகித்தபோது
அலி சகோதரர்களுடன்



அந்தக் காங்கிரஸின் கொடியேற்று விழா

சாந்திநிகேதனில் காந்திஜி, டாகூர், ஆண்ட்ரூஸ்—1924

1925-ல டார்ஜீலிங்கில்: காந்திஜிக்குப் பின்னல் மத்தியில் ஸி. ஆர். தாஸ்; இதற்குப்பின் சில தினங்களில் ஸி ஆர். தாஸ் இறந்து விட்டார்



17660


I want world sympathy in this battle of Right against Might.
Dandi M K Gandhi
5.4.'30

தண்டி யாத்திரைக் கடிதம்

"மறத்தை எதிர்த்து நடக்கும் இவ்வறப் போரில்
உலக அனுதாபத்தை நாடுகிறேன்"

5-4-30 —எம். கே. காந்தி







1930-ல் உப்பு சத்தியாக்கிரகத்திற்காக காந்திஜி தண்டி கடற்கரைக்குக் கால் நடை யாத்திரை சென்ற காட்சிகள்

தண்டியில் சரோஜினி நாயுடுவுடன்

அலகாபாத்தில் மோத்திலால் நேரு தலைமையில் நடந்த
ஒரு கூட்டத்தில் காந்திஜி

அக்கூட்டத்தில் நேரு பேசுகிறார்



ஆழ்ந்த யோசனையில்—1931 சபர்மதியில்

1931, கராச்சி காங்கிரஸ் காட்சிகள்



கராசசி காங்கிரஸில் மேலும் சில காட்சிகள்

1931 ஆகஸ்டில் இங்கிலாந்துக்குப் புறப்படு
வதற்கு முன் ஸிம்லாவுக்கு விஜயம் செய்தபோது

இந்திய அ:சாங்க உள்நாட்டிலாகா
காரியதரிசி ஸ்ரீ எமர்ஸனைச் சந்திக்கப்
போகும் வழியில்—1931 ஆகஸ்ட்

பம்பாய் விக்டோரியா துறைமுகத்தில் கப்பலேறுமுன் காந்திஜி—கஸ்தூரிபா, பண்டித மாளவியா, சரோஜினி நாயுடு ஆகியோருடன்



1931-ல் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டுக்காக காந்திஜியையும் இதர இந்தியத் தலைவர்களையும் இங்கிலாந்திற்கு ஏற்றிச் சென்ற கப்பல் 'எஸ்.எஸ்.ராஜபுதானா'





ஏடனில் அக்கபபலில் ஏறிய ஷௌகத் அலியுடன்

"ஸெக்ஸ்டாண்ட" கருவியைக் கையாளுகிறா

ஜீவரட்சிப்பு சாதனத்தின் உபயோக
முறையைக் கற்றுக் கொள்கிறார்

மார்ஸேல்ஸில் காந்திஜி கப்பலைவிட்டு இறங்குகிறா

மார்ஸேல்ஸில் எடுத்த படம்: ஸி. எப. ஆண்ட்ருஸ், காந்திஜி
குமாரி முரியல் லெஸ்டர், மகாதேவ் தேசாய, மீராபென்,
பியாரிலால், மற்ருெரு ஆங்கிலேய நண்பர்

வட்டமேஜை மகாநாட்டுக் கூட்டத்திற்குப் போகிருர்;
அவருடன்கூட சரோஜினி நாயுடு, பிரபாசங்கர் படடானி,
ஏ. ரங்கஸ்வாமி ஐயங்கார், மகாதேவ் தேசாய் ஆகியோர்
உள்ளனர்

லண்டனில் இரண்டாவது வட்டமேஜை மகாநாட்டில். 1931

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ராம்ஸே மக்டனுல்ட் பேடடிக்குப பின் டௌனிங் தெரு, 10 இலக்கமுள்ள பிரதம மந்திரி இல்லத்தில்

மன்னரைச் சந்திப்பதற்காக மகாதேவ் தேசாய், சரோஜினி நாயுடு, ஆகியோருடன் பக்கிங்ஹாம் அரண்மனைக்குப் போகிருர்

(எதிரே—மேல்) சார்லி சாப்ளினைச சந்திப்பதற்காக இந்திய நண்பர் ஒருவர் இல்லத்திற்கு வருகையில் காந்திஜியை லண்டன் மக்கள் மொய்க்கிருர்கள்

(எதிரே—கீழ்) லண்டனில் சார்லி சாப்ளினுடன்—1931

லண்டனில் "நண்பர்கள் சங்க" கூட்டததில காந்திஜி பேசுகிருர்

லங்காஷயர் நெசவாலேக்கு விஜயம்

ஆலேயின பெண் தொழிலாளர்களுடன் காந்திஜி

ஆங்கிலச் சுரங்கத் தொழிலாளி
யின் குடிலுக்கு விஜயம் செய்து
விட்டு விடைபெறும் காட்சி

1931 அக்டோபரில், லண்டனில்
கால்நடைக் கண்காட்சியில்
பரிசு பெற்ற இரு ஆடுகளை
காந்திஜி வியப்புடன் பார்க்கிறா



1931-ல் லண்டனில எடுத்த படம்

காந்திஜியின் உருவத்தை அமெரிக்கச் சிற்பி ஜோ டேவிட்ஸன் உருவாக்குகிருர்

ரொமெய்ன் ரோலந்துடன் ஸ்விட்ஸாலண்ட்
விலலேநியூவேயில்

1933-1942

"யுத்தத்திற்குப்பின் சுதந்திரம்' என்பதில் எனக்குச் சிரத்தை யில்லை. இப்போதே சுதந்திரம் என்பதுதான் என் விருப்பம். யுத்தத்தில் இங்கிலாந்து வெற்றி பெறுவதற்கு இது உதவும்... பிரிட்டிஷ் மக்களுடன் நமக்குப் பூசல் இல்லை; அவர் களது ஏகாதிபத்தியத்தைத்தான் எதிர்த்துப் போராடு கிறோம். பிரிட்டிஷ் ஆதிக்கம் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைக்குக் காரணம், கோபம் அல்ல. இப்போதைய கடுமையான நெருக்கடியில் இந்தியா தனக்குரிய பங்கை நிறைவேற்றுவதற்கு வசதியளிக்கவே அது எழுந்திருக்கிறது.



பார்ஸாத்தில் காந்திஜியும் சர்தார் பட்டேலும்

காந்திஜி பலமுறை சிறையிடப்பட்ட
ஏரவாடா மத்திய சிறைச்சாலை



1934-ல் கஸ்தூரிபா

கன்னியாகுமரியில் கடல் ஸ்நானம்

திருச்சி, பொன்மலை ரயில்வே தொழிலாளர்
கூட்டத்தில் பிரசங்கம்—



சேவா கிராமுககு கர்நாடகததிலிருந்து வந்த
சமூக ஊழியர் கூட்டத்தில் பிரசங்கம்—1934

பூகம்பம் ஏற்பட்டபின் பீகாரில் காந்திஜி-அவருக்கடுத்தாற்
போல் டாக்டர் ராஜேந்திர பிரசாத் இருக்கிறார்

ஹரிஜன முன்னேற்றத்துக்காக 1934-ல் சுற்றுப்பிரயாணம்
செய்தபோது ஆமதாபாத் அருகில் உள்ள பல்ஸாரில்
பேசுகிறார்

1934-ல பம்பாய காங்கிரஸ கூட்டத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத், பண்டித மாளவியா ஆகியோருடன்



குஜராத் கிராமங்களில் பிளேக் பெருவாரியாக வந்தபோது கஸ்தூரிபா, சர்தார் பட்டேல் சகிதமாக காந்திஜி சுறறுப பிரயாணம்—1935

சேவா கிராமில் காந்திஜியின் குடிசை

அக்குடிசையில் காந்திஜியின் அறை





சேவா கிராமில்

சேவா கிராமில் கஸதூரிபா. பேரன்
ஆகியோருடன் உலாத்துதல்

சேவா கிராமில் ஜவாஹர்லால் நேருவுடன் காந்திஜி

மாலையில் உலாத்துகிறார்

புத்திளம் கன்றிடம் கனிவு

சேவா கிராமில் காந்திஜியும் கஸ்தூரிபாவும்



சேவா கிராமில் காலையில் காந்திஜி உலாத்துகிறார்

சேவா கிராமில்
கஸ்தூரிபா
மகாத்மாவின்
பாதங்களைக்
கழுவுகிறார்

1937 ஏப்ரலில் சென்னைக்குச் சென்றபோது
பேஸின் பிரிட்ஜ் ஜங்ஷனில் ராஜாஜியும் காந்திஜியும்

பெங்களூர் விஜயம் 1937

பம்பாய் ஜுஹு கடற்கரையில்
காலையில் உலாத்துகிறார்



1938 ஹரிபுரா காங்கிரஸில் அக்கிராசனர்
சுபாஷ் சந்திர போஸும் காந்திஜியும்

அலஹாபாத்தில் காங்கிரஸ ஊழியாகள் கூட்டத்தில



1938 மே மாதம் வடமேறகு எலலேப்புற மாகாணததிற்குச் செலலும் வழியில் லாகூா ஸ்டேஷனில் ரயில் பெடடியில காந்திஜி

பெஷாவரில ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகிறுர்



காந்திஜியும கான அப்துல் கபாரகானும்

பட்டாணியா கூட்டத்தில் காந்திஜி பேசுகிறார்

குதாய்-கித்-மத்கார் தொண்டர்களைப் பார்வையிடுகிறார்

கவர்னரைச் சந்திக்கச் செல்கிறார்

தட சசீலத்தில் கபார்கானுடன்

கபாாகானின் கிராமமாகிய உதமஜயியில்

கைபர கணவாயில்

(எதிரே—மேல்) டில்லியில் ஹரிஜன க்ஷேமாபிவிருத்திக்கு
நிதி திரட்டுதல்—அருகில் ஜம்னுலால் பஜாஜ்—1940

(எதிரே—கீழ்) புது டில்லியில் சத்தியவதி தேவி,
புலாபாய் தேசாயுடன்



காநதிஜியுமு மகாதேவ் தேசாயுமு—பம்பாயில

ராஜகோட உடன பாடடிறகுப பிறகு டில்லியில்
பிா்லா மாளிகையில் மகாதேவ தேசாயுடன

உபவாசம் பூர்த்தியான பின் முதல் ஆகாரம் (இடது)

ராஜ்கோட் உபவாசம் ஆரம்பிப்பதற்கு முன் கடைசியாகச்
சாப்பிடுகிருர்—1939 மார்ச் (வலம்)





(எதிரே—மேல்) காந்திஜி, ஜவாஹர்லால் நேரு, மகாதேவ் தேசாய், டாக்டர் பட்டாபி ஸீதாராமய்யா ஆகியோர் 1940-ல் வர்தாவில் காரியக் கமிட்டிக் கூட்டத்திற்குப் போகிறார்கள்

(எதிரே—கீழ்) டில்லி ரயில்வே ஸ்டேஷனில் காந்திஜி—1940



காந்திஜியும் முகமத் அலி ஜின்னாவும்—1939 நவம்பரில் வைஸ்ராயுடன் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியபோது

ஸிம்லாவில் காந்திஜி
வைஸ்ராயைக் காணச்
செல்கிருர்—1940
செப்டம்பர்

சாந்திநிகேதனில் ரவீந்திரநாத் டாகூருடன் —1940

சாந்திநிகேதனில் காந்திஜிக்கும் கஸ்தூரிபாவுக்கும்
டாகூர் அளித்த உபசரிப்பில்

சாந்திநிகேதனில் கலாபவனத்தில்
நந்தலால் போஸுடன்





கல்கத்தா பிரஸிடென்ஸி ஆஸ்பத்திரியில் வியாதியாகப் படுத்திருக்கும் தீனபந்து ஆண்டரூஸைக் காந்திஜி கவனிக்கிருர்



சேவாகிராமில் ஆச்சார்ய விநோபா பாவேயுடன்—1941

பண்டித மதன்மோகன் மாளவியாவுடன் ஒரு அறிக்கையைப் பரிசீலிக்கிருர்

17660



ஜவாஹர்லால் நேருவுடன் விவாதம்

ஸர்தார் பட்டேலுடன் உல்லாசவேளை



டாக்டர் ராஜேந்திர
பிரஸாத்துடன்
வேலைகளைக்
கவனிக்கிறார்



ஜம்னாலால்
பஜாஜுடன்

அலகாபாத்தில் கமலா நேரு ஞாபகார்த்த ஆஸ்பத்திரி திறப்பு விழாவில்—1941 பிப்ரவரி

வர்தாவில் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தின்போது—1942 பிப்ரவரி

ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸுடன்—1942 மார்ச்

இந்தியாவை விட்டு "வேளியேறு" தீர்மானத்தை நிறைவேற்றிய சரித்திரப்பிரசித்தமான அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம்—1942 ஆகஸ்ட் 8உ

வெளியே குழுமியிருந்த ஜனக்கூட்டம்

1942 ஆக. 9உ ஜனங்கள் மீது போலீஸ் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

1943-1948

மானபங்கத்திற்கு உள்ளான மாதர்களின் அபயக்குரல்தான் என்னை உடனடியாக நவகாளிக்கு ஈர்த்தது. இப்போதையப் பணிதான் எனது வாழ்க்கையிலேயே மிகக் கஷ்டமான, சிக்கல் நிறைந்த பணியாகும்... எத்தகைய நெருக்கடிக்கும் நான் தயாராக இருக்கிறேன். 'செய் அல்லது செத்து மடி' என்பதை இங்கு பரீட்சை செய்ய வேண்டும். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமாதானமாக, சுமுகமாக வாழத் தெரிந்து கொள்ள வேண்டும்; அதுதான் 'செய்' என்பதற்கு இந்த இடத்தில் அர்த்தம். இல்லையேல் இம்முயற்சியிலேயே என் உயிரைவிட வேண்டும்... மரணம் யாரையும் விடாது—பின்னர் அதைப் பற்றி அஞ்சுவானேன்? துன்பத்திலிருந்து விடுதலை செய்யும் நண்பனே மரணம்.

கஸ்தூரிபா (ஜனனம்—1869 ; மரணம்—1944)

கஸ்தூரிபாவின் அந்திம காலம், பூனு ஆகாகான் அரண்மனையில் 1944 பிப்ரவரி 22உ

ஆகாகான் அரண்மனை—1942 ஆகஸ்ட் முதல் 1944 மே வரையில் காந்திஜி காவலில் வைக்கப் பட்டிருந்த இடம்

கஸ்தூரிபா சடலத்தருகில் காந்திஜி

கஸ்தூரிபா, மகாதேவ் தேசாய் ஆகியோரின் "சமாதிகள" முன்னல் காந்திஜி. ஆகாகான் அரண்மனையில் காவலில் இருக்கையில் தேசாயும் இறந்தார்



இப்போது அந்தச் சமாதிகளின் தோற்றம்



அருமை நண்பர் தக்கர் பாபாவுடன்
ஜுஹுு கடற்கரையில்—1944



பம்பாயில் காந்தி—ஜின்னு பேச்சு வார்த்தைகள்— 1944
செப்டம்பரில்





காந்திஜி சர்க்காவில் நூற்கிருர்—1945, பம்பாயில்

காந்திஜி " தனுஷ் " தக்ளியில் நூற்கிருர். சக்கரம் இல்லாத நூற்புக் கருவி 'தனுஷ் தக்ளி"

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணனுடன் சம்பாஷணை

பங்கி காலனியில் இந்திய தேசிய
ராணுவத்தினர்களுக்குப் பிரசங்கம்-1945 ;
பண்டித நேரு முன்புறம் இருக்கிருர்



1945 -ல் டில்லியில் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வருகிறார். காந்திஜியுடன் கான் அப்துல் கபார்கான், ஜவாஹர்லால் நேரு, ஆச்சாரிய கிருபளானி ஆகியோரும் உள்ளனர்



ஸிம்லா, வைஸ்ராய் மாளிகைக்குப் போகும் வழியில், 1945

(எதிரே) ஸிம்லாவில் சர்தார் பட்டேல், மணிபென் பட்டேல் ஆகியோருடன், வைஸ்ராயைச் சந்திப்பதற்காக காந்திஜி ஸிம்லா சென்றிருந்தார்; 1945 ஜூலை

c9

வங்காள கவர்னர் ஆர். ஜி. கேஸியுடன். அன்று காந்திஜியின் மௌன தினமாகையால எழுத்து மூலம் சம்பாஷணை நடக்கிறது

கல்கத்தாவிற்கு அருகில் டம்டம் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளைக் கண்டு பேசியபின்—1946



சாந்திநிகேதனுக்கு காந்திஜியின் கடைசி விஜயம்— 1945

கல்கத்தாவில் சுபாஷ் சந்திர போஸ் இல்லத்தில்

அஸ்ஸாமில் ஒரு
பட்டு நெசவாலைக்கு
விஜயம் -

(எதிரே—மேல்) 1946-ல்
காந்திஜியின் சென்னைச் சுற்றுப்
பிரயாணம்—மூன்றாவது வகுப்பு
ரயில் பெட்டியில் தரிசன மேடை
மீது நின்று பேசுகிறார்

(எதிரே—கீழ்) ரயில்வே ஸ்டேஷனில்
கிராமப் பெண்கள் "கோஷ்டி நூற்பைப்
பாவையிடுகிறார்.

மூர்ஷிதாபாத் மாதர்
கூட்டத்தில், 1946 ஜனவரி





ஆச்சார்ய கிருபளானியுடன்

மௌலானா அபுல்கலாம் ஆஜாத்துடன



1946-ல் டில்லி போகும்போது மூன்றும்
வகுப்பு ரயில்பெட்டியில் ஓய்வெடுத்தல்

பேரன் கோபுவுடன் தமாஷ



இந்தோனேஷிய விருந்தினருடன்

பங்கி காலனிக்கு விஜயம் செய்த ஸர் ஸ்டாபோர்ட்
கிரிப்ஸை வரவேற்கிறார்—1946 ஏப்ரல்

(எதிரே) லார்ட் பெதிக்
லாரென்ஸுடன்—1946 ஏப்ரல்



தேஜ் பகதூர் ஸப்ரூவைக்
கடைசி முறையாகச் சந்திக்கிருர்

டில்லியில் பண்டித மாளவியாவுடன்; உடல் நலி
வுற்றிருந்த மாளவியா, காந்திஜியைக் காண்பது
இதுதான் கடைசித் தடவை—1945



புது டில்லி, பங்கி காலனி நூற்பு யக்ஞத்தில்
காந்திஜி—1946



(எதிரே—மேல்)
ஜவாஹர்லால் நேரு, சர்தார்
படடேல் ஆகியோருடன்

(எதிரே—கீழ்)
சபையினருடன் தமாஷ்

பம்பாய் அ. இ. கா. கமிட்டிக்
கூட்டத்தில் - 1946 ஜூலை




CHICAGO
CHICAGO





கிழக்கு வங்காளத்தில் உள்ள
நவகாளிக்குச் செல்லும் வழியில்
1946 நவம்பர்

நவகாளி யாத்திரையில்
அசௌக்கியமுற்றபோது
''டோலி''யில் பிரயாணம்

(எதிரே—மேல்)
கிழக்கு வங்காளக்
கிராமத்தில் களங்கப்
படுத்தப்பட்ட ஓர்
ஆலயத்தைப் பார்த்து
விட்டுத் திரும்புதல்

(எதிரே—கீழ்)
வயல் வழியே நடந்து
செல்கிறுர்

காந்திஜி ஒரு மூங்கில்
பாலத்தின் மேல் செல்கிறுர்





ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில்

தபால்களைப் பார்க்கிறார்



நவகாளியில் காந்திஜியின் சாந்தி யாத்திரைப் படங்கள்





பீஹாரில் துவம்சம் செய்யப்பட்ட கிராமங்களுக்கு விஜயம்

கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி திரட்டுதல்;
காங்கிரஸ் தலைவர் புரபஸர் அப்துல் பாரி, காந்திஜிக்குப்
பக்கத்தில் இருக்கிறார்

கான் அப்துல் கபார்கானுடன் காலையில் உலாத்துவதற்குச் செல்லுதல்—பீகார், 1947 மார்ச்

1947 மார்ச் மாதம், புது டில்லியில்
ஆசிய உறவு மகாநாட்டில் பிரசங்கம்

லார்ட் மவுண்ட்பாட்டனுடன் சம்பாஷணை
நடுவே சிற்றுண்டி அருந்துதல்

(எதிரே) மவுண்ட்பாட்டன்
தம்பதிகளுடன்

காந்திஜியும், ஜவாஹர்லால் நேருவும் ஹரித்துவாரில் உள்ள பஞ்சாப் அகதிகள் முகாமில் பிரசங்கம் நிகழ்த்துகிறார்கள்—1947 ஜூன்

காஷ்மீர் தலைநகரில் உலாத்துதல்



காஷ்மீர் செல்லும் வழியில் லாகூர் ரயில்வே ஸ்டேஷனில்
—1947 ஜூலை

1947 ஆகஸ்ட் 15-ல் டில்லியில் சுதந்திர தின விழா கொண்டாடப்படுகையில், ஹிந்து—முஸ்லிம்களிடையே சமாதானம் நிலவுவதற்காக கல்கத்தாவில் காந்திஜி உபவாசம் மேற்கொள்கிறார்



கல்கத்தாவில் சரத்சந்திர போஸுடன்—1947 ஆகஸ்ட்



கல்கத்தாவில் வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்துவது சம்பந்தமாக முஸ்லிம் லீக் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கிறார்—ஆகஸ்ட் 1947

ஈத் பெருநாள் அன்று கல்கத்தா மைதானத்திற்கு வருகிறார்—1947 ஆகஸ்ட்



டில்லியில் உள்ள முஸ்லிம்களை ஆசப் அலி வீட்டில்
சந்தித்துப் பேசுகிறார்—1947 செப்டம்பர்

புதுடில்லி பிர்லா
மாளிகையில்
பிரார்த்தனைக்
கூட்டம்

புதுடில்லி பிர்லா மாளிகையில்
நூல் நூற்கிறார்—தலையில்
அணிந்திருப்பது பிரபல
" நவகாளி தொப்பி "

பர்மா பிரதம மந்திரி
யு. நு–வுடன் பிர்லா
மாளிகையில்—1947
டிஸம்பர்

ஒரு கடித்ததைப் படிக்கிறுர்— 1947 நவம்பர்

டில்லியில் ஹிந்து—முஸ்லிம் மக்களிடையே மனமாற்றம்
உண்டுபண்ணுவதற்காக மேற்கொண்ட கடைசி
உபவாசத்தை முடிக்கிருர்





உபவாசத்தின் கடைசி தினம், புது டில்லி
பிர்லா மாளிகையில்—1948 ஜனவரி 18

டில்லிக்கருகில் மெஹ்ராலியில் உள்ள குவாஜா குத்புதீன்
மசூதிக்கு விஜயம்—1948 ஜனவரி 27

மெஹ்ராலி மசூதியில் உர்ஸ் விழாவின்போது
முஸ்லிம்களுக்குப் பிரசங்கம்—1948 ஜனவரி 27

அந்தக் கூட்டத்தின் ஒரு தோற்றம்

பிர்லா மாளிகையில் மகாத்மாஜியின் பூத உடல் தரிசனம்

கடைசி யாத்திரைக்கு ஆயத்தங்கள

பிரேத ஊர்வலம்



நன்கு அலங்கரித்த வாகனத்தில் மகாதமா காநதியின் அஸதி, அல்ஹாபாத் திரிவேணி சங்கமத்துக்குக்கொண்டு செலலப்படுகிறது—1948 பிபாவரி 12

அஸ்திக் கலசத்துடன் தலைவர்கள் சங்கமம் செல்கிறார்கள்

அஸ்திக் கரைப்பு வைபவத்தைக் காணவந்த பொது ஜனங்கள் சங்கமக் கரையில் திரண்டிருக்கிறார்கள

ராஷ்டிரபதி ராஜேந்திர பிரஸாத, அவர் மனைவி ராஜவன்ஷி தேவி, சர்தார் வலலபாய பட்டேல ஆகியோர் காந்திஜி சமாதியில அஞ்சலி செய்கிறார்கள்

17660



ராஜகட்டததில் உள்ள காந்திஜியின் சமாதி

மகாத்மாஜி சமாதிமீது ஜவாஹர்லால் நேரு
மாலை சாத்துகிறார்



புது டில்லி பிர்லா மாளிகை; காந்திஜி தம் கடைசிக் காலத்தில் வசித்திருந்த அறை வலதுபுறம் இருக்கிறது



பிர்லா மாளிகையில் மகாத்மாஜி தங்கிய போது அவரது அறையின் காட்சி



காநதிஜி கடைசியாக நூல் நூற்ற சர்க்கா

காந்திஜி தென் ஆப்பிரிக்க சிறையில் இருந்தபோது தயாரித்த செருப்புகள். இவற்றை தெ. ஆ. பிரதமா ஸமட்ஸுக்கு அவர் பரிசளித்தார். மஹாத்மா தயாரித்த ஜோடுகளை அணியத் தமக்கு யோக்கியதை இல்லை என்று பிரதமர் பதிலளித்தார்.

புது டில்லி பிர்லா மாளிகையில் உள்ள புல்வெளி—இங்கேதான் மகாதமாஜி கடைசிப் பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்தினார்



காந்திஜி தரித்த இரு தொப்பிகள் : ஒன்று பர்மா பிரதம மந்திரி யு. நு தந்த பரிசு; மற்றொன்று நவகாளி குடியானவர் ஒருவர் அளித்தது.

மகாதமாவின பூலோக ஆஸ்திகள—சாப்பாட்டுக் கிண்ணங்கள், மரக் கரண்டியும் முள்கருவியும், பிரசிததிவாய்ந்த பீங்கான் குரங்குகள்: அவரது டயரி; பிரார்த்தனைப் புஸ்தகம்; கடிகாரம், படிககம், காகிதம் கிழிக்கும் கத்திகள், பாதரட்சைகள

காந்தி சித்திர விளக்கம்

பக். 8—9: போர்பந்தர் (சுதமபுரி) என்ற ஊரில் உள்ள வெள்ளைக்கல் வீடு ஒன்றில் மோஹன்தாஸ் கரம்சந்த் காந்தி 1869 அக்டோபர் 2உ பிறந்தார். அவ் வீட்டின் உறுதியான சுவர்கள், பிரம்மாண்டமான நிலைகள், நாற்காலி மேஜையற்ற வெறுந் தரை முதலியவை அங்கு உதித்த புதிய மனிதரின் குணங்களுக்கு அறிகுறிகளாக இருந்தன. உள்வலிமை, கடுமையான எளிமை, விசாலம் ஆகியவையே அக் குணங்கள்.

பக். 10: அவ்வீட்டின் உரிமையாளரும்மோஹன் தாஸின் தந்தையுமான கரம்சந்த் உத்தம் சந்த் காந்தி ஒரு கம்பீரமான புருஷர். அவரிடம் ஆடம்பரம் இல்லை; ஆனால் ராஜகளை உண்டு. போர்பந்தரிலும், ராஜ்கோட்டிலும் பல வருஷங்கள் திவானாக இருந்த அவருக்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது கத்தியவார் தலைப்பாகை. மன்னர்களின் மரியாதையைப் பெற்ற மதியூகி அவர். அவருக்கு வெடுக்கென்று கோபம் வரும். ஆனால் நேர்மையிலிருந்து இம்மியும் பிறழமாட்டார். அவர் மதாபிமானியும் கூட.

மோஹன்தாஸின் தாயார் புத்லிபாய் மிகுந்த அடக்கமும் தெய்வபக்தியும் வாய்ந்தவர். அவருக்கு மோஹனிடம் வாத்ஸல்யம் அதிகம். பெற்றோர்களிடம் சிறுவர் காந்திக்கு மிகுந்த அபிமானமும் மரியாதையும் உண்டு. ஆனால் அவர்கள் ஒரு குதிரை வண்டியில் பள்ளிக்கூடம் செல்லுமாறு சொன்னபோது மாத்திரம் காந்தி மறுத்துவிட்டு நடந்தே சென்றார்.

பக். 12: ராஜ்கோட் சமஸ்தான திவான் பதவியை கரம் சந்த் காந்தி ஏற்றபின் அவரது குடும்பமும் போர்பந்தரிலிருந்து வெளியேறியது. ராஜ்கோட்டில் ஒரு சாதாரண வீட்டில் அவர்கள் வசித்து வந்தனர். நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதிலும் சத்திய உபாசனையிலும் மோஹன்தாஸுக்கு ஆர்வம் அங்குதான் பிறந்தது. நோய்வாய்ப்பட்ட தந்தைக்குச் சிகிச்சை செய்வதற்காக அவர் பள்ளிக் கூடம் விட்டபின், விளையாட்டு வகுப்பிற்குக்கூடச் செல்லாமல், ஓடோடியும் வருவார்.

பக். 11—13: மோஹன்தாஸ் ஏழாவது வயதில் ராஜ்கோட் ஆரம்பப் பள்ளியில் சேர்ந்தார். பள்ளியில் பிரமாதக்கெட்டிக்காரர் என்று பெயர் எடுக்கவில்லை. விளையாடுவதற்குப் பதில் நீண்ட உலாத்தல்களே அவரது தேகப்பயிற்சி. பெருக்கல் வாய்ப்பாடு சுவாரஸ்யமாக இல்லை; சம்ஸ்கிருதம் சங்கடமாக இருந்தது; க்ஷேத்திர கணிதத்தில் மாத்திரம் அவருக்குச் சிரத்தை அதிகம். நேரம் தவறாமல் வருவது, தோழமை உணர்ச்சி, சத்திய நெறி முதலிய அவரது உயர் குணங்களை எடுத்துக்காட்டும் சந்தர்ப்பங்கள் பல பள்ளியில் நிகழ்ந்ததுண்டு. ஒரு முறை உபாத்தியாயர் தூண்டியும்கூட அடுத்த பையனைப் பார்த்துக் 'காப்பியடிக்க' அவர் கண்டிப்பாக மறுத்துவிட்டார். ஆனால் சில சமயங்களில் அவர் புலால் உண்டார். தேக பலம் பெற்றுத் தேசத்தை விடுதலை செய்வதற்கான 'சீர்திருத்தம்' என்று அதை அவர் அப்போது கருதினார்.

இவ்விதம் கள்ளத்தனமாக மாமிசம் சாப்பிடுவதில் மோஹன்தாஸுக்கு அவர் அண்ணா ஒரு கூட்டாளி. சாப்பாட்டுச் செலவு சம்பந்தமாக அண்ணாவிடம் வாங்கிய கடனைக் கொடுப்பதற்காக ஒருநாள் மோஹன்தாஸ், வீட்டிலிருந்து சிறிது தங்கத்தைத் திருடினார். பிறகு இக் குற்றத்தைத் தானே தந்தை முன் ஒப்புக்கொண்டு பச்சாதாபப் பட்டார். இதைக் கேட்டு கரம்சந்த் உள்ளம் உருகிக் கண்ணீர் விட்டார். அஹிம்சையில் ஒரு படிப்பினை போல இருந்தது இச் சம்பவம்.

மோஹன்தாஸுக்கு ரலியத் பென் என்ற ஒரே ஒரு சகோதரி உண்டு. பிற்காலத்தில் தம் விதவைச் சகோதரிக்குக் காந்திஜி மாதம் 10 ரூபாய்தான் அனுப்பி வந்தார். கோதுமை அரைத்துச் சுயமாகவும் கொஞ்சம் சம்பாதித்துக் கொள்ளும்படி அவளுக்கு யோசனை கூறிவிட்டார்.

1883-ம் வருஷம் கஸ்தூரிபாயை மோஹன்தாஸ் கல்யாணம் செய்துகொண்டார்; இருவருக்கும் ஒரே வயது. 16 வயதில் மோஹன்தாஸ் தந்தையை இழந்தார். இரு ஆண்டுகள் கழித்துமெட்ரிகுலேஷன் முடிந்து, பவநகரிலுள்ள சியாமளதாஸ்

கல்லூரியில் சேர்ந்தார். அங்கு சில மாதங்கள் படிப்பதற்குள் பாரிஸ்டர் பட்டம் பெறுவதற்காக அவரை இங்கிலாந்திற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. நாடு திரும்பியபின் தந்தையைப் போல அவரும் திவானுவார் என்று எதிர்பார்த்தனர். மது, மாதர், மாமிசம் மூன்றையும், தொடுவதில்லை என்று மோஹன்தாஸ் சபதம் செய்தபிறகு அவரை இங்கிலாந்திற்குச் செல்லத் தாயார் அனுமதித்தார்.

பக். 14: குடும்ப ரட்சணையைக் கவனித்துக் கொண்டு மோஹன்தாஸுக்கு வேண்டிய உதவிகளையும் அளிப்பதற்கு அண்ணு லக்ஷ்மிதாஸ் தாமாகவே முன்வந்தார். தம்பியிடம் அவருக்கு மிகுந்த வாஞ்சை.

பக் 15: *1888* செப்டம்பர் 4உ மோஹன்தாஸ் கப்பல் ஏறி அக்டோபரில் லண்டன் போய்ச் சேர்ந்தார். அங்கு நவநாகரிகப் பிரமுகர்களோடு கலந்து பழகுவதற்கு அவசியமான டாம்பீக அலங்காரங்களோ தைரியமோ அவரிடம் இல்லை. இக்குறையை நீக்குவதற்காக அவர் விலையுயர்ந்த உடைகளை வாங்கினுர்; பிடில் வாசிக்கவும், நடனமாடவும், மேடைப்பிரசங்கம் செய்யவும் அவர், வெள்ளைக்காரர்களைப் போல், பயிற்சி பெற ஆரம்பித்தார். ஆனுல் அந்த மோகம் எல்லாம் மூன்று மாதத்தில் மறைந்துவிட்டது. சைவ உணவுக்காரரான மோஹன்தாஸ், லண்டன் சைவ உணவுச் சங்கத்தில் சேர்ந்து நிர்வாகக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'வெஜிடேரியன்' என்ற சஞ்சிகையில் அவர் கட்டுரைகளும் எழுதி வந்தார். தமது பேட்டையில் சைவ உணவு 'கிளப்' ஒன்றையும் ஆரம்பித்தார்.

பக். 16: *1891* ஜூன் 10உ மோஹன்தாஸ் ஒரு பாரிஸ்டர் ஆனுர். ஜூன் 12உ கப்பலில் புறப்பட்டு ஜூலையில் பம்பாய் திரும்பினுர். இந்தியாவில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார்; ஆனுல் போதிய வருமானம் கிடைக்கவில்லை. தென் ஆப்பிரிக்காவில் தங்கள் சட்ட ஆலோசகராகப் பொறுப்பேற்கும்படி அப்துல்லா கம்பெனியார் *1893* ஏப்ரல் மாதத்தில் அவரைக் கேட்டுக் கொண்டனர். காந்தி தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று டர்பான் கோர்ட்டில் ஆஜராகி வந்தார். அங்கு 'கூலிகள்' என்று வெள்ளையர்களால் இழிவுபடுத்தப்பட்ட இந்தியர்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டி அவர்களை ஸ்தாபனரீதியாக ஒன்று திரட்டுவதற்குஅவர்பாடுபட்டார். வழக்கை முற்றவிடுவதற்குப் பதில் வாதி, பிரதிவாதிகளுக்கிடையே சமரஸம் ஏற்படுத்துவதில்தான் வக்கீல் காந்திக்குச் சிரத்தை அதிகம். இதனுல் அவருடைய கீர்த்தி பரவித் தொழிலும் பெருகியது; நான்கு குமாஸ்தாக்களை நியமிக்க வேண்டியதாயிற்று. அவர்களுள் குமாரி ஷ்லெஸின் என்ற ஜெர்மன் பெண்ணும் ஒருவர். காந்தி ஆங்கிலப் பாணியில் உடை தரித்து வந்தார்; ஐரோப்பிய நண்பர்களை அடிக்கடி வீட்டிற்கு அழைத்து விருந்தளித்தார். கிறிஸ்தவர், ஹரிஜனங்கள் உள்பட குமாஸ்தாக்களின் கம்மோடுகளை அவரே கழுவினுர். இவ்வேலைகளைக் கஸ்தூரிபாயும் அவருடன் பகிர்ந்துகொண்டார்.

பக். 17–19: ரஷியாவின் டால்ஸ்டாய், இங்கிலாந்தின் ரஸ்கின், இந்தியாவின் ராய்சந்த்பாய் —இந்த மும்மூர்த்திகளும் காந்தியிடம் மறைந்து கிடந்த உன்னதக் கருத்துக்களுக்கு உருக்கொடுத்தார்கள். கடவுளுக்கும் சகோதர மனிதர்களுக்கும் அவர் மாபெரும் சேவைகளைப் புரிவதற்கு ஆதாரமாக இருந்த கருத்துக்கள் அவை. உழைத்துப் பிழைப்பது, பொருளாதார சமத்துவம், சமூக சமத்துவம் ஆகியவை சம்பந்தமாகக் காந்தி கொண்டிருந்த கருத்துக்கள் இப்பெரியார்களின் நூலில் எதிரொலித்தன. ஹிந்து சாஸ்திரங்களின் பாஷ்யக் களஞ்சியமாக ராய்சந்த் விளங்கினுர். காந்திய சாத்வீக போராட்ட முறையின் மாபெரும் சாத்தியங்களை டால்ஸ்டாய் தீர்க்க திருஷ்டியுடன் முன்கூட்டியே குறிப்பிட்டிருந்தார். 'கடையனுக்கும் கடைத் தேற்றம்' என்ற ரஸ்கினின் நூல்தான் சமுதாய வாழ்க்கை நடத்த, போனிக்ஸ் குடியேற்றத்தை அமைப்பதற்குக் காந்திக்கு ஆதர்சம் அளித்தது. பல்வேறு நாட்டினரும் அக்குடியேற்றத்தில் சேர்ந்து வாழ்ந்தனர். தோட்டி வேலை முதல் சகல வேலைகளையும் அவர்களே செய்து கொண்டனர். தமது கருத்துக்களைப் பரப்பவும் இந்திய சமூகத்தினரை ஒன்றுபடுத்தவும் 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற சஞ்சிகையைப் போனிக்ஸில் காந்தி ஆரம்பித்தார்.

பக். 20–21: தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தைக் காந்தி எதிர்த்த போதிலும் *1899*-ல் போயர் யுத்தத்திலும், *1906*-ல் ஜூலு கலகத்திலும் அவர் இந்தியத் தொண்டர் படையில் சேர்ந்து பணியாற்றினுர். மனித சேவா உணர்ச்சியாலும் இந்தியரின் மதிப்பை வெளிப்படுத்தும் விருப்பத்தாலுமே அவர் இவ்வாறு செய்தார். சர்க்காரும் பதக்கங்களை வழங்கிக் காந்தியைக் கௌரவித்தது.

பக். 21 : ஆசியாக்காரர்களுக்கு—குறிப்பாக இந்தியர்களுக்கு—எதிராகத் தென் ஆப்பிரிக்க சர்க்கார் பல சட்டங்களை அமல் நடத்தி வந்தது. குடியேற்றத் தடை மசோதாவை எதிர்த்துக் காந்தி தலைமையில் இந்தியர்கள் போராட்டத்தைத் தொடங்கிச் சிறை புகுந்தனர். 1908-ல் காந்திக்கு இரண்டு வருஷ வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவரது முயற்சிகளுக்கு உதவி செய்வதற்காகக் கோக்கலே 1912-ல் தென் ஆப்பிரிக்காவிற்கு விஜயம் செய்தார். கோக்கலேயைத் தமது அரசியல் குருவாகக் காந்தி கருதினார். காந்தியின் வேலைகளில் கோக்கலேக்கும் சிரத்தை ஏற்பட்டது. "மகாவீரர்களின், உயிர்த்தியாகிகளின் லக்ஷணங்கள் இந்த மனிதரிடம் குடிகொண்டுள்ளன. பிரம்மாண்ட ஆத்மீக சக்தி வாய்ந்தவர் இவர்," என்பது காந்தியைப் பற்றி கோக்கலேயின் வாக்கு.

பக். 22–23 : கோக்கலே சமரஸ முயற்சி செய்ததன் விளைவாக அநியாய "கருப்பர் சட்டத்தை" ரத்துச் செய்வதாகத் தென் ஆப்பிரிக்க சர்க்கார் வாக்களித்தது. ஆனால் அந்த வாக்கை நிறைவேற்றவில்லை. ஆதலால் மீண்டும் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கக் காந்தி முடிவு செய்தார். அவர் மேற்கத்தி உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு, சக தொண்டர்களைப் போல் தாமும் லுங்கியையும் ஜிப்பாவையும் அணிந்துகொண்டார். இந்தத் தொண்டர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர்கள். காலன்பாக் என்ற ஜெர்மானியரும் காந்தியின் அருமந்த சீடர் ஆனார். கட்டிட சிற்பியான அவருக்கு ஏராளமான வருமானம் கிடைத்து வந்தது. அவர் தம் நிதியையும், திறமையையும் தாராளமாக நல்கிக் காந்திக்கு உதவி செய்தார். 1910-ல் அமைக்கப்பட்ட டால்ஸ்டாய் பண்ணைக்கான செலவு முழுவதையும் அவரே ஏற்றுக்கொண்டார். அதோடு காந்தியின் போராட்டங்களிலும் கலந்துகொண்டார்.

ஸ்ரீ. போலக்கும் அவரது மனைவியாரும் காந்தியின் உறுதுணைவர்கள். போனிக்ஸ் குடியிருப்பில் அவர்களும் உறுப்பினர்கள்.

பக். 24 : அக்காலத்தில் காந்தியைப் போலவே கஸ்தூரிபாயும் பலவீனராக இருந்தார். ஆனால் அவரது உறுதி மலைபோன்றது. அவர் சத்தியாக்கிரகியாகச் சேர்ந்து 1908-ல் சிறை புகுந்தார். அன்றுமுதல் காந்தியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும், ஒவ்வொரு இயக்கத்திலும் அவர் தீவிரப் பங்கு எடுத்து வந்தார். 2037 ஆண்கள், 127 பெண்கள், 57 குழந்தைகள் ஆகியோர் அடங்கிய சத்தியாக்கிரகப் படை, பிரசித்தி பெற்ற யாத்திரையை 1913-ல், ஆண்டவனின் பெயரால் ஆரம்பித்தது. அவர்களில் நூற்றுக்கணக்கான பேர் சிறை புகுந்தனர்; சிரமப்பட்டனர்; சிலர் உயிரையும் கொடுத்தனர். வள்ளியம்மா என்ற 16 வயதுத் தமிழ்ப் பெண்ணும், ஹர்பத் சிங் என்ற 75 வயதுக்கிழவரும் இவ்விதம் பிராணத்தியாகம்செய்தவர்களில் இருவர்.

தென் ஆப்பிரிக்க இந்தியர்களுக்கு நியாயம்பெறுவதற்காக ஜெனரல் ஸ்மட்ஸுடனும் அவரது சர்க்காருடனும் காந்தி 20 வருஷ காலம் போராட்டம் நடத்தினார். 1914-ல் இருவரும் செய்துகொண்ட தற்காலிக ஒப்பந்தத்தின் விளைவாக அறப்போர் நிறுத்தி வைக்கப்பட்டது. அவ்வாண்டே காந்தி தென் ஆப்பிரிக்காவிடம் இறுதியாக விடை பெற்றுக்கொண்டார். அவர் ஒரு மகா புருஷராக, மாபெருந் தலைவராக உருவானது அந்நாட்டில்தான்.

கோக்கலேயைச் சந்திப்பதற்காகக் கஸ்தூரிபாயுடன் இங்கிலாந்திற்குக் காந்தி சென்றார். அப்போது முதலாவது உலக மகா யுத்தம் மூண்டது; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உதவுவது தம் கடமையென்று கருதி வைத்தியத் தொண்டர் படையொன்றைக் காந்தி திரட்டினார். இப் படையினருக்கு வேண்டிய உடைகளைத் தயாரிப்பதில் கஸ்தூரிபாய் உதவி புரிந்தார். பின்னர் காந்தி தேக அசௌக்கியம் அடையவே இங்கிலாந்திருந்து புறப்படவேண்டியதாயிற்று.

பக். 26–27 : 1915 ஜனவரி மாதத்தில் காந்தியும் கஸ்தூரிபாயும் இந்தியாவிற்குத் திரும்பினர். அப்போதுமுதல் இந்திய மில் துணியை—வேஷ்டியும், தலைப்பாகையும்—கத்தியவார் பாணியில் காந்தி அணிய ஆரம்பித்தார்.

பக். 28–31 : பிறகு இந்தியாவில் சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்தார். தென் ஆப்பிரிக்கப் போராட்டத்தில் பிரமாதத் தியாகம் புரிந்த தமிழர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்காக அவர் தென்னிந்தியாவிற்கு விஜயம் செய்தார். அவரையும் கஸ்தூரிபாயையும் தமிழர்கள் ஆர்வமுடன் வரவேற்றனர். பழம் பெரும் தேசபக்தர் ஜி. ஏ. நடேசன் அவர்களைத் தம்விருந்தினராக உபசரித்து, பொதுக் கூட்டங்களில் காந்தி பேசுவதற்கும் ஏற்பாடு செய்தார். தென் ஆப்பிரிக்காவில் காந்தி புரிந்த சாதனைகளை நடேசன் ஏற்கெனவே தமது சஞ்சிகைகள் மூலமும் புத்தகங்கள் மூலமும் பிரபலப்படுத்தியிருந்தார். தென் ஆப்பிரிக்கப் போராட்ட வீரருக்கு வேறு பல நகரங்களும் அமோக வரவேற்பு அளித்தன.

கல்லூரியில் சேர்ந்தார். அங்கு சில மாதங்கள் படிப்பதற்குள் பாரிஸ்டர் பட்டம் பெறுவதற்காக அவரை இங்கிலாந்திற்கு அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது. நாடு திரும்பியபின் தந்தையைப் போல அவரும் திவானுவார் என்று எதிர்பார்த்தனர். மது, மாதர், மாமிசம் மூன்றையும், தொடுவதில்லை என்று மோஹன்தாஸ் சபதம் செய்தபிறகு அவரை இங்கிலாந்திற்குச் செல்லத் தாயார் அனுமதித்தார்.

பக். 14: குடும்ப ரட்சணையைக் கவனித்துக் கொண்டு மோஹன்தாஸுக்கு வேண்டிய உதவிகளையும் அளிப்பதற்கு அண்ணு லக்ஷ்மிதாஸ் தாமாகவே முன்வந்தார். தம்பியிடம் அவருக்கு மிகுந்த வாஞ்சை.

பக். 15: 1888 செப்டம்பர் 4உ மோஹன்தாஸ் கப்பல் ஏறி அக்டோபரில் லண்டன் போய்ச் சேர்ந்தார். அங்கு நவநாகரிகப் பிரமுகர்களோடு கலந்து பழகுவதற்கு அவசியமான டாம்பீக அலங்காரங்களோ தைரியமோ அவரிடம் இல்லை. இக்குறையை நீக்குவதற்காக அவர் விலையுயர்ந்த உடைகளை வாங்கினர்; பிடில் வாசிக்கவும், நடனமாடவும், மேடைப் பிரசங்கம் செய்யவும் அவர், வெள்ளைக்காரர்களைப் போல், பயிற்சி பெற ஆரம்பித்தார். ஆனல் அந்த மோகம் எல்லாம் மூன்று மாதத்தில் மறைந்துவிட்டது. சைவ உணவுக்காரரான மோஹன்தாஸ், லண்டன் சைவ உணவுச் சங்கத்தில் சேர்ந்து நிர்வாகக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 'வெஜிடேரியன்' என்ற சஞ்சிகையில் அவர் கட்டுரைகளும் எழுதி வந்தார். தமது பேட்டையில் சைவ உணவு 'கிளப்' ஒன்றையும் ஆரம்பித்தார்.

பக். 16: 1891 ஜூன் 10உ மோஹன்தாஸ் ஒரு பாரிஸ்டர் ஆனர். ஜூன் 12உ கப்பலில் புறப்பட்டு ஜூலையில் பம்பாய் திரும்பினர். இந்தியாவில் வக்கீல் தொழிலை ஆரம்பித்தார்; ஆனல் போதிய வருமானம் கிடைக்கவில்லை. தென் ஆப்பிரிக்காவில் தங்கள் சட்ட ஆலோசகராகப் பொறுப்பேற்கும்படி அப்துல்லா கம்பெனியார் 1893 ஏப்ரல் மாதத்தில் அவரைக் கேட்டுக் கொண்டனர். காந்தி தென் ஆப்பிரிக்காவிற்குச் சென்று டர்பான் கோர்ட்டில் ஆஜராகி வந்தார். அங்கு 'கூலிகள்' என்று வெள்ளையர்களால் இழிவுபடுத்தப்பட்ட இந்தியர்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டி அவர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்று திரட்டுவதற்கு அவர்பாடுபட்டார். வழக்கை முற்ற விடுவதற்குப் பதில் வாதி, பிரதிவாதிகளுக்கிடையே சமரஸம் ஏற்படுத்துவதில்தான் வக்கீல் காந்திக்குச் சிரத்தை அதிகம். இதனல் அவருடைய கீர்த்தி பரவித் தொழிலும் பெருகியது; நான்கு குமாஸ்தாக்களை நியமிக்க வேண்டியதாயிற்று. அவர்களுள் குமாரி ஷ்லெஸின் என்ற ஜெர்மன் பெண்ணும் ஒருவர். காந்தி ஆங்கிலப் பாணியில் உடை தரித்து வந்தார்; ஐரோப்பிய நண்பர்களை அடிக்கடி வீட்டிற்கு அழைத்து விருந்தளித்தார். கிறிஸ்தவர், ஹரிஜனங்கள் உள்பட குமாஸ்தாக்களின் கம்மோடுகளை அவரே கழுவினர். இவ்வேலைகளைக் கஸ்தூரிபாயும் அவருடன் பகிர்ந்துகொண்டார்.

பக். 17–19: ரஷியாவின் டால்ஸ்டாய், இங்கிலாந்தின் ரஸ்கின், இந்தியாவின் ராய்சந்த்பாய் —இந்த மும்மூர்த்திகளும் காந்தியிடம் மறைந்து கிடந்த உன்னதக் கருத்துக்களுக்கு உருக்கொடுத்தார்கள். கடவுளுக்கும் சகோதர மனிதர்களுக்கும் அவர் மாபெரும் சேவைகளைப் புரிவதற்கு ஆதாரமாக இருந்த கருத்துக்கள் அவை. உழைத்துப் பிழைப்பது, பொருளாதார சமத்துவம், சமூக சமத்துவம் ஆகியவை சம்பந்தமாகக் காந்தி கொண்டிருந்த கருத்துக்கள் இப்பெரியார்களின் நூலில் எதிரொலித்தன. ஹிந்து சாஸ்திரங்களின் பாஷ்யக் களஞ்சியமாக ராய்சந்த் விளங்கினர். காந்திய சாத்வீக போராட்ட முறையின் மாபெரும் சாத்தியங்களை டால்ஸ்டாய் தீர்க்க திருஷ்டியுடன் முன்கூட்டியே குறிப்பிட்டிருந்தார். 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற ரஸ்கினின் நூல்தான் சமுதாய வாழ்க்கை நடத்த, போனிக்ஸ் குடியேற்றத்தை அமைப்பதற்குக் காந்திக்கு ஆதர்சம் அளித்தது. பல்வேறு நாட்டினரும் அக்குடியேற்றத்தில் சேர்ந்து வாழ்ந்தனர். தோட்டி வேலை முதல் சகல வேலைகளையும் அவர்களே செய்து கொண்டனர். தமது கருத்துக்களைப் பரப்பவும் இந்திய சமூகத்தினரை ஒன்றுபடுத்தவும் 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற சஞ்சிகையைப் போனிக்ஸில் காந்தி ஆரம்பித்தார்.

பக். 20–21: தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தைக் காந்தி எதிர்த்த போதிலும் 1899-ல் போயர் யுத்தத்திலும், 1906-ல் ஜூலு கலகத்திலும் அவர் இந்தியத் தொண்டர் படையில் சேர்ந்து பணியாற்றினர். மனித சேவா உணர்ச்சியாலும் இந்தியரின் மதிப்பை வெளிப்படுத்தும் விருப்பத்தாலுமே அவர் இவ்வாறு செய்தார். சர்க்காரும் பதக்கங்களை வழங்கிக் காந்தியைக் கௌரவித்தது.

பக். 21 : ஆசியாக்காரர்களுக்கு—குறிப்பாக இந்தியர்களுக்கு—எதிராகத் தென் ஆப்பிரிக்க சர்க்கார் பல சட்டங்களை அமல் நடத்தி வந்தது. குடியேற்றத் தடை மசோதாவை எதிர்த்துக் காந்தி தலைமையில் இந்தியர்கள் போராட்டத்தைத் தொடங்கிச் சிறை புகுந்தனர். 1908-ல் காந்திக்கு இரண்டு வருஷ வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. அவரது முயற்சிகளுக்கு உதவி செய்வதற்காகக் கோக்கலே 1912-ல் தென் ஆப்பிரிக்காவிற்கு விஜயம் செய்தார். கோக்கலேயைத் தமது அரசியல் குருவாகக் காந்தி கருதினார். காந்தியின் வேலைகளில் கோக்கலேக்கும் சிரத்தை ஏற்பட்டது. "மகாவீரர்களின், உயிர்த்தியாகிகளின் லக்ஷணங்கள் இந்த மனிதரிடம் குடிகொண்டுள்ளன. பிரம்மாண்ட ஆத்மீக சக்தி வாய்ந்தவர் இவர்," என்பது காந்தியைப் பற்றி கோக்கலேயின் வாக்கு.

பக். 22–23 : கோக்கலே சமரஸ முயற்சி செய்ததன் விளைவாக அநியாய "கருப்பர் சட்டத்தை" ரத்துச் செய்வதாகத் தென் ஆப்பிரிக்க சர்க்கார் வாக்களித்தது. ஆனால் அந்த வாக்கை நிறைவேற்றவில்லை. ஆதலால் மீண்டும் சத்தியாக்கிரகத்தை ஆரம்பிக்கக் காந்தி முடிவு செய்தார். அவர் மேற்கத்தி உடைகளைக் களைந்தெறிந்துவிட்டு, சக தொண்டர்களைப் போல் தாமும் லுங்கியையும் ஜிப்பாவையும் அணிந்துகொண்டார். இந்தத் தொண்டர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர்கள். காலன்பாக் என்ற ஜெர்மானியரும் காந்தியின் அருமந்த சீடர் ஆனார். கட்டிட சிற்பியான அவருக்கு ஏராளமான வருமானம் கிடைத்து வந்தது. அவர் தம் நிதியையும், திறமையையும் தாராளமாக நல்கிக் காந்திக்கு உதவி செய்தார். 1910-ல் அமைக்கப்பட்ட டால்ஸ்டாய் பண்ணைக்கான செலவு முழுவதையும் அவரே ஏற்றுக்கொண்டார். அதோடு காந்தியின் போராட்டங்களிலும் கலந்துகொண்டார்.

ஸ்ரீ. போலக்கும் அவரது மனைவியாரும் காந்தியின் உறுதுணைவர்கள். போனிக்ஸ் குடியிருப்பில் அவர்களும் உறுப்பினர்கள்.

பக். 24 : அக்காலத்தில் காந்தியைப் போலவே கஸ்தூரிபாயும் பலவீனராக இருந்தார். ஆனால் அவரது உறுதி மலைபோன்றது. அவர் சத்தியாக்கிரகியாகச் சேர்ந்து 1908-ல் சிறை புகுந்தார். அன்றுமுதல் காந்தியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும், ஒவ்வொரு இயக்கத்திலும் அவர் தீவிரப் பங்கு எடுத்து வந்தார். 2037 ஆண்கள், 127 பெண்கள், 57 குழந்தைகள் ஆகியோர் அடங்கிய சத்தியாக்கிரகப் படை, பிரசித்தி பெற்ற யாத்திரையை 1913-ல், ஆண்டவனின் பெயரால் ஆரம்பித்தது. அவர்களில் நூற்றுக்கணக்கான பேர் சிறை புகுந்தனர்; சிரமப்பட்டனர்; சிலர் உயிரையும் கொடுத்தனர். வள்ளியம்மா என்ற 16 வயதுத் தமிழ்ப் பெண்ணும், ஹர்பத் சிங் என்ற 75 வயதுக் கிழவரும் இவ்விதம் பிராணத்தியாகம் செய்தவர்களில் இருவர்.

தென் ஆப்பிரிக்க இந்தியர்களுக்கு நியாயம் பெறுவதற்காக ஜெனரல் ஸ்மட்ஸுடனும் அவரது சர்க்காருடனும் காந்தி 20 வருஷ காலம் போராட்டம் நடத்தினர். 1914-ல் இருவரும் செய்துகொண்ட தற்காலிக ஒப்பந்தத்தின் விளைவாக அறப்போர் நிறுத்தி வைக்கப்பட்டது. அவ்வாண்டே காந்தி தென் ஆப்பிரிக்காவிடம் இறுதியாக விடை பெற்றுக்கொண்டார். அவர் ஒரு மகா புருஷராக, மாபெருந் தலைவராக உருவானது அந்நாட்டில்தான்.

கோக்கலேயைச் சந்திப்பதற்காகக் கஸ்தூரிபாயுடன் இங்கிலாந்திற்குக் காந்தி சென்றார். அப்போது முதலாவது உலக மகா யுத்தம் மூண்டது; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு உதவுவது தம் கடமையென்று கருதி வைத்தியத் தொண்டர் படையொன்றைக் காந்தி திரட்டினர். இப் படையினருக்கு வேண்டிய உடைகளைத் தயாரிப்பதில் கஸ்தூரிபாய் உதவி புரிந்தார். பின்னர் காந்தி தேக அசௌக்கியம் அடையவே இங்கிலாந்திருந்து புறப்படவேண்டியதாயிற்று.

பக். 26–27 : 1915 ஜனவரி மாதத்தில் காந்தியும் கஸ்தூரிபாயும் இந்தியாவிற்குத் திரும்பினர். அப்போதுமுதல் இந்திய மில் துணியை—வேஷ்டியும், தலைப்பாகையும்—கத்தியவார் பாணியில் காந்தி அணிய ஆரம்பித்தார்.

பக். 28–31 : பிறகு இந்தியாவில் சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்தார். தென் ஆப்பிரிக்கப் போராட்டத்தில் பிரமாதத் தியாகம் புரிந்த தமிழர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்காக அவர் தென்னிந்தியாவிற்கு விஜயம் செய்தார். அவரையும் கஸ்தூரிபாயையும் தமிழர்கள் ஆர்வமுடன் வரவேற்றனர். பழம்பெரும் தேசபக்தர் ஜி. ஏ. நடேசன் அவர்களைத் தம் விருந்தினராக உபசரித்து, பொதுக் கூட்டங்களில் காந்தி பேசுவதற்கும் ஏற்பாடு செய்தார். தென் ஆப்பிரிக்காவில் காந்தி புரிந்த சாதனைகளை நடேசன் ஏற்கெனவே தமது சஞ்சிகைகள் மூலமும் புத்தகங்கள் மூலமும் பிரபலப்படுத்தியிருந்தார். தென் ஆப்பிரிக்கப் போராட்ட வீரருக்கு வேறு பல நகரங்களும் அமோக வரவேற்பு அளித்தன.

ஒரு வருஷ காலம் அரசியலைப் பற்றிப் பேசுவதில்லை என்று கோக்கலேக்கு அளித்திருந்த வாக்குறுதியை மீருமல், நாடெங்கும் காந்தி சுற்றுப்பிரயாணம் செய்து நிலைமையை ஆராய்ந்தார். சாந்திநிகேதனிலும் அவர் சில தினங்கள் தங்கினுர். டாகூர் 1915 பிப்ரவரி 18உ எழுதிய கடிதம் ஒன்றில் காந்தியை 'மகாத்மா' என்று குறிப்பிட்டார்.

பக். 32: 1915-ல் ஆமதாபாத் அருகிலுள்ள கிரேப் என்ற இடத்தில் சத்தியாக்கிரக ஆசிரமம் ஒன்றைக் காந்தி நிறுவினுர். சத்தியம், அஹிம்சை, நாவடக்கம், திருடாமை, உடைமையில் பற்றில்லாமை, சுதேசி, அஞ்சாமை, தீண்டாமை, தாய்மொழிக் கல்வி, கதராடை என்ற விரதங்களை ஆச்ரமவாசிகள் மேற்கொண்டனர். 1917-ல் சபர்மதிக் கரைக்கு இந்த ஆச்ரமம் மாற்றப்பட்டது.

1916 முதல் 18 வரை பல சத்தியாக்கிரக இயக்கங்களைக் காந்தி நடத்தினுர். 1917-ல் ஒரு ஏழைத் தொழிலாளியின் வேண்டுகோளுக்கிணங்கிப் பீஹார்சென்று சம்பரான் குடியானவர்களின் கஷ்டத்தை நீக்குவதற்காக அறப்போரைத் தொடங்கினுர். பின்னுல் அவர் நடத்திய மாபெரும் போராட்டங்களுக்கு முன்னுேடியாக விளங்கியது சம்பரான் இயக்கம். ராஜேந்திர பிரசாத், கிருபளானி முதலியோர் அப்போதுதான் காந்தியின் சீடர்கள் ஆயினர். சர்க்காருடனும், தோட்ட முதலாளிகளுடனும் காந்தி பேச்சுவார்த்தை நடத்தி, குடியானவர்கள் கட்டாயமாக அவுரியைப் பயிரிடவேண்டும் என்ற வழக்கத்தை ஒழித்தார்.

அடுத்த வருஷம் ஆமதாபாத் மில் தொழிலாளர்களின் குறைகளை நீக்குவதற்காக வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்தார். அவர் உண்ணுவிரதம் மேற்கொண்டதன் பேரில் தொழிலாளருக்குச் சாதகமான ஒப்பந்தம் 1918 மார்ச் மாதம் கைகூடிற்று. இந்தியாவில் அவர் மேற்கொண்ட முதலாவது உபவாசம் இது. தொழிலாளர்கள் உறுதி தளராமல் இருக்கவும், முதலாளிகள் மனம் மாறவும் காந்தி அனுஷ்டித்த உபவாசம் இது.

கேதா குடியானவர்களுக்கும் அஞ்சாமையைக் காந்தி போதித்தார். மகசூல் தேய்ந்துவிட்டதால் வரிகொடுக்கவேண்டாமென்று அவர்களுக்கு உபதேசித்தார்.

முதலாவது உலகயுத்தம் முடிந்தவுடன் ரௌலட் சட்டம் என்ற வாய்ப்பூட்டுச் சட்டத்தைச் சர்க்கார் கொண்டுவந்தது. அதுவரை ராஜவிசுவாசியாக இருந்துவந்த காந்தி இதனுல் அதிர்ச்சியடைந்தார். அவருடைய கட்டளை பேரில் நாடெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சர்க்கார் கொடிய அடக்குமுறையில் இறங்கியது 1919 ஏப்ரல் மாதம் ஜாலியன்வாலாபாக் படுகொலை நடந்தது. ஆனுல் மக்கள் பணியவில்லை; அக்டோபர் மாதம் காந்தி கூறியபடி கிலாபத் தினத்தைக் கொண்டாடினர். இக்கிளர்ச்சியில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தோளோடுதோள் சேர்த்து நின்றனர். பின்னர் சாத்விக ஒத்துழையாமை இயக்கத்தைக் காந்தி ஆரம்பித்தார். விதேசிப் பண்டங்களைப் பகிஷ்கரிப்பதும், கதர் ஆடை அணிவதும் சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய ஸ்தானம் பெற்றன.

பக். 33: கதர் வேஷ்டி, ஜிப்பா, காந்திக்குல்லாய் என்ற புதிய உடை மோஸ்தரைக் காந்தி ஆரம்பித்து வைத்தார். இது சுதந்திர வீரர்களின் ராணுவ உடுப்பாகப் பெருமை பெற்றது. 1921 அக்டோபரில் இந்த உடையையும் காந்தி குறைத்துக்கொண்டு முட்டுக்கு மேல் துண்டு உடுத்த ஆரம்பித்தார். அவரை "அரை நிர்வாணப் பக்கிரி" என்று சர்ச்சில் ஏளனம் செய்தார்; ஆனுல் டாகூரோ, "ஆண்டி வேஷம் புனைந்த மகாத்மா" என்று போற்றினுர்.

பக். 34: 1921 டிசம்பரில் ஆமதாபாத் காங்கிரஸ் நடந்தது. அப்போது சட்ட மறுப்பு இயக்கம் உச்ச கட்டத்தில் இருந்தது. புதிய காங்கிரஸ் அக்ராசனர் ஸி. ஆர். தாஸ் உட்பட பல்லாயிரக் கணக்கான காந்தியச் சீடர்கள் சிறையில் இருந்தனர். மக்களுக்குத் தலைமை தாங்கி நடத்தும் பொறுப்பு முழுவதும் காந்திமீது விழுந்தது. அன்று முதல் காந்திதான் காங்கிரஸ், காங்கிரஸ்தான் காந்தி என்ற பேதமற்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

மக்களைப் போராட்டத்திற்குத் தயாராக்குவதற்காகக் காந்தி சுற்றுப்பிரயாணம் செய்ய ஆரம்பித்தார்; புரட்சிக் கனலை மூட்டினுர். ராஜாங்க துவேஷப் பிரசாரம் செய்ததாக 1922 மார்ச் மாதம் அவருக்கு 6 வருஷ சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனுல் தேக அசௌக்கியம் காரணமாக 1924-ல் அவர் விடுதலையானுர்.

இதற்கிடையே ஹிந்து-முஸ்லிம் உறவு மோசம் அடைந்து, டில்லி, நாகபுரி, லக்ஷ்மணபுரி முதலிய நகரங்களில் கலவரம் எழுந்தது. இதற்குக் காந்தி தம்மையே நொந்துகொண்டு டில்லியில், முகமத் அலி இல்லத்தில் 21 தின பிராயச்சித்த உபவாசத்தை மேற்கொண்டார்.

பக். 36 : பிறர் வேண்டுகோளுக்கிணங்கி 1924-ல் பெல்ஹாம் காங்கிரஸிற்குக் காந்தி அக்கிராசனர் ஆனார். அதற்கு முன்போ பின்போ அவர் இப்பதவியை வகிக்கவே இல்லை. நூற்றுக்கு நூறு சுதேசி, சர்வ கட்சி ஐக்கியம் என்ற கொள்கைகளை வற்புறுத்தி அங்கு இரத்தினச் சுருக்கமாகப் பேசினார். வேறு எந்த அக்கிராசனரும் இவ்வளவு சுருக்கமான பிரசங்கத்தை நிகழ்த்தியதில்லை. ராட்டையில் நூற்பவர்கள்தான் காங்கிரஸில் சேரலாம் என்ற விதியைக் காந்தி ஏற்படுத்தினார். சர்க்கா பொறித்த மூவர்ணக் கொடியைக் காந்தி ஏற்றி வைத்தார். நாடு சுதந்திரம் பெறும்வரை அதுவே தேசியக்கொடியாக விளங்கிவந்திருக்கிறது.

பக். 37 : பெல்ஹாம் காங்கிரஸ் முடிந்ததும் காந்தி சுற்றுப் பிரயாணத்தில் முனைந்தார். அப்போது சாந்திநிகேதனிலும் டாகூருடன் அவர் சிறிது காலம் தங்கினார். அப்போதைய முக்கிய பிரச்னைகளைப் பற்றி இரு பெரியார்களும் மனம்விட்டு விவாதித்தனர். பின்னர், நோய்வாய்ப்பட்டிருந்த ஸி. ஆர். தாஸுடன் டார்ஜீலிங்கில் காந்தி ஐந்து நாட்கள் தங்கினார். அதன்பின் சில தினங்களில் தேச பந்து தாஸ் தேக வியோகம் அடைந்தார். லோகமானிய திலகரின் மரணத்தைத் தொடர்ந்து இதுவும் வந்ததால் இந்தியா அதிர்ச்சி அடைந்தது. 'நாயகனை இழந்த' வங்காளத்துக்கு ஆறுதல் அளிப்பதற்காகக் கல்கத்தாவில் காந்தி மேலும் சில தினங்கள் தங்கினார்.

பக். 39-41: 1927-ல் ஜவாஹர்லால்நேரு தலைமையில் கூடிய லாகூர் காங்கிரஸில் பூரண சுதந்திரமே குறிக்கோள் என்று தீர்மானிக்கப்பட்டது. இது சித்தியாவதற்காக உப்புச் சட்டங்களை மீறுவதன்மூலம்சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தக் காந்தி உத்தேசித்தார். உப்பைக்கூட ஏழை மக்கள் இஷ்டம் போல் உபயோகிக்க முடியாது என்பது அடிமை வாழ்வின் கொடுமையை எடுத்துக் காட்டியது. சபர்மதி ஆச்ரம பிரார்த்தனைக் கூட்டங்களில் இந்தப் போராட்டத் திட்டத்தைக் காந்தி விளக்கினார்.

1930 மார்ச் 12௨ காலை 6½ மணிக்கு 78 தொண்டர்களுடன் சபர்மதியிலிருந்து காந்தி புறப்பட்டார். இதுவே சரித்திரப் பிரசித்தி வாய்ந்த தண்டி யாத்திரை. 24 நாட்களில் 241 மைல் தூரத்தைக் கடந்து ஏப்ரல் 2-ந் தேதி தண்டியை அவர் அடைந்தார். யாத்திரையின் கடைசிக் கட்டத்தில் சரோஜினி நாயுடுவும் கூடச் சென்றார். இயற்கை உப்பை ஒரு பிடி எடுத்ததன்மூலம் உப்புச் சட்டத்தைக் காந்தி உடைத்தார். உடனே "சட்ட மறுப்பு வீரருக்கு" கதர் நூல் மாலையை சரோஜினி சூட்டினார். மே 4௨ காந்தி கைது செய்யப்பட்டார். தண்டியாத்திரையால் நாடெங்கும் உத்வேகம் பிறந்தது; ஏராளமான மாதர்களும் உப்பு யுத்தத்தில் குதித்தனர். லண்டனில் நடக்கவிருந்த வட்டமேஜைமகாநாட்டிற்குக்காங்கிரஸின் ஒத்துழைப்பைப் பெறுவது அவசியம் என்று சர்க்கார் கருதியதால் 1931 ஜனவரி 25௨ காந்தி விடுதலை செய்யப்பட்டார். காந்தி-இர்வின் ஒப்பந்தத்தின் மூலம் காங்கிரஸின் கோரிக்கைகளில் பெரும்பாலானவற்றைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டது.

பக். 42 : காந்தியின் தண்டியாத்திரையின்போது மோதிலால் நேரு தமது அரண்மனையான "சுயராஜ்ய பவனத்தை" தேசத்திற்குத் தானம்செய்தார். காந்தியின் கருத்துக்களை எல்லாம் மோதிலால் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் அவரது முக்கிய சகாவாக விளங்கி வந்தார். சட்ட சபை முனையில் அவர் ஒரு மாபெரும் வீரர். மரணப் படுக்கையிலிருந்த அவர் காந்தியிடம் கூறிய கடைசி வார்த்தைகள் வருமாறு:—

> "மகாத்மாஜி, நான் சீக்கிரம் போய்விடுவேன்; சுயராஜ்யத்தைக் கண்ணால் பார்க்க நான் இங்கு இருக்க மாட்டேன். ஆனால் அதை நீங்கள் பெற்று விட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்."

பக். 44–45: முக்கியத்துவம் நிறைந்த கராச்சி காங்கிரஸ் 1931-ல் கூடியது. அக்கூட்டம் திறந்த வெளியில் நடந்தது. காந்தியின் பதினொரு அம்சங்கள், ஜவாஹர்லாலின் பிரேரணைகள் சில-ஆகியவை சேர்ந்த மக்களின் ஜீவாதார உரிமைச் சாசனத்தைக் கராச்சி காங்கிரஸ் தயாரித்தது. வட்ட மேஜை மகாநாட்டிற்குத் தூது கோஷ்டியை அனுப்பவும் பூரண சுதந்திரக் கோரிக்கையை வற்புறுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. கலை வேலைப்பாடமைந்த மேடையிலிருந்து காந்தி உரை நிகழ்த்தினார். ஸ்தல பொருட்களைக் கொண்டு குடிசைகளின் உருவத்தில் காங்கிரஸ் மைதானத்தின் வாசல்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த இந்தியச் சூழ்நிலையை ஏற்படுத்தியவர் காந்தியே.

அவ்வருஷம் அரசியல் அலுவல்கள் அதிகமாக இருந்தும் குஜராத்தி வித்யா பீடத்தின் பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை வகிக்கக் காந்தி சம்மதித்தார். ஆமதாபாத்தில் அவரே நிர்மாணித்த தேசியக்கல்லூரி அது. ஓழிந்தநேரங்களில் அங்கு அவர் பாடபோதனை நடத்தியதும் உண்டு.

பக். 46: வட்டமேஜை மகாநாட்டு அட்டவணை பற்றி விவாதிப்பதற்காக ஸிம்லாவிற்குச் சென்று வைஸ்ராய் வின்லிங்டனைக்

காந்தி சந்தித்தார். அம்மகாநாட்டிற்குக் காந்தியே காங்கிரஸின் ஏகப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பக். 47–49 : லண்டன் செல்ல "ராஜபுதனு" என்ற கப்பலில் ஏறுவதற்காகக் காந்தி 1931 ஆகஸ்ட் 29உ பாம்பாய் போய்ச் சேர்ந்தார். கஸ்தூரிபாயும் மற்ற சகாக்களும் அவரை வழி அனுப்பச் சென்றிருந்தனர். காந்தியின் கோஷ்டியில் பண்டித மாளவியா, சரோஜினி முதலியோர் இருந்தனர். புறப்படுமுன் காந்தி விடுத்த செய்தி வருமாறு:- "வாயில்லாப் பூச்சிகளாக இருக்கும் கோடானுகோடி மக்களின் நலனுக்கு முரணுக இல்லாதபடி, எல்லாக் குழுவினர்களின் நலனையும் பிரதிபலிக்க நான் முயற்சிப்பேன். அந்தக் கோடானு கோடி மக்களுக்காகத்தான் காங்கிரஸ் இருந்து வருகிறது."

ஒற்றை வேஷ்டி உடுத்திக் கப்பலின் மேல்தளத்தில் நின்ற காந்தியை மற்றப் பிரயாணிகள் பார்த்துப் பார்த்து வியந்தனர். நூற்பு யக்ஞம் உட்பட ஆச்ரம அனுஷ்டானங்களையெல்லாம் கப்பலிலும் காந்தி நடத்திவந்தார். மேல்தளத்தில் பிரார்த்தனையும் நடத்தினுர். குழந்தைகளுக்குத் திராட்சை, பேரீச்சை முதலிய பழங்களைக் கொடுத்து அகமகிழ்ந்தார். கப்பலின் கோணமானி, உயிர்காப்பு வளையம் முதலியவற்றின் உபயோகத்தை அவர் தெரிந்து கொண்டதுடன் கப்பலை ஓட்டியும் பார்த்தார். புது விஷயங்களில் அவருக்கு அவ்வளவு சிரத்தை. காந்தியிடம் கப்பல் காப்டன் மிகுந்த மரியாதையுடன் நடந்துகொண்டார். "இரு வாரங்களுக்கு நான் உங்கள் கைதி" என்று அவரிடம் காந்தி கூறினுர்.

1931 செப்டம்பர் 11உ மார்ஸேல்ஸ் துறைமுகத்துக்குக் கப்பல் போய்ச் சேர்ந்தது. "இந்தியாவின் ஆத்மிகத் தூதரை" வரவேற்பதற்காக அந்நகர வீதிகள் நெடுகிலும் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்றனர். லண்டனிலும் காந்தி அமோகமாக வரவேற்கப்பட்டார்; சில பத்திரிகைகள் மாத்திரமே அவரைக் கிண்டல் செய்தன. அந்நகரில் ஏழைகள் வாழும் "ஈஸ்ட் எண்ட்" பகுதியில் காந்தி தங்கினுர்.

பக். 50–53 : செப்டம்பர் 14உ திங்கள்கிழமையன்று காந்தி வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொண்டார். அன்று அவரது மௌன தினம் ஆதலால் தம் கருத்துக்களை அவ்வப்போது எழுத்துமூலம் அக்ராஸனர் சாங்க்கே பிரபுவிடம் தெரிவித்தார். மறுநாள் அவர் மகாநாட்டில் பேசுகையில், "இந்தியாவும்பிரிட்டனும் கண்ணியமான, சம அந்தஸ்துள்ள பங்காளிகளாக இருக்கலாம் என்ற நம்பிக்கையுடன் பிரிட்டனிலிருந்து புறப்பட விரும்புகிறேன்," என்று குறிப்பிட்டார். டிசம்பர் 1உ வரை இழுபறியாக நடந்த அம்மகாநாடு, அந்த "பிரம்மாண்ட போலி நாடகம்," காந்திக்கு ஏமாற்றத்தையே அளித்தது. ஈஸ்ட் எண்டில் தங்கியிருந்த காலத்தில் ஸ்தல மக்களிடையே அவரது புகழ் ஓங்கியது. இந்தியாவுக்கு எல்லோரது நல்லெண்ணத்தையும் அவர் சம்பாதித்தார். அவர் பின்சென்ற இரு பிரிட்டிஷ் ரகசிய போலீஸார்களுக்கும் அவர்மீது மிகுந்த அபிமானம் ஏற்பட்டது. கொடிய குளிர் காலமாக இருந்தும் அவர் காலை உலாவுதலை நிறுத்தவில்லை.பிரபல ஹாஸ்ய நடிகர் சார்லி சாப்ளினைத் தமக்குத் தெரியாது என்று அவர் ஒரு பேட்டியில் குறிப்பிட்டது எல்லோருக்கும் ஆச்சரியம் அளித்தது. அவர் கோவணுண்டி வேஷத்தில் மன்னரைப் பார்க்கச் சென்றதும், "எனக்கும் அவருக்கும் சேர்த்து மன்னரே நிறைய ஆடை அணிந்திருக்கிருர்," என்று கூறியதும் பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தின.

பக். 54–55 : ஈட்டன், ஆக்ஸ்போர்ட், லங்காஷயர் நகரங்களுக்குக் காந்தி சென்று உரை நிகழ்த்தினுர். விதேசித் துணி பகிஷ்காரத்தினுல் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த லங்காஷயர் மில் தொழிலாளரிடம் அவர் இந்தியாவின் நிலையை விளக்கினுர். "உங்களில் 30 லட்சம் பேருக்குத்தான் வேலையில்லை. இந்தியாவிலோ கடந்த ஆறு மாதங்களாக 30 கோடிப் பேருக்கு வேலையில்லை. உங்கள் கஷ்டத்துக்கு இந்தியாமீது பழி சுமத்தாதீர்கள்" என்றுர் அவர்.

பக். 56 : காந்தி வழக்கத்துக்கு விரோதமாக, இங்கிலாந்தில் சிற்பி ஒருவரும், சைத்ரிகர் ஒருவரும் தம் உருவத்தைச் சமைப்பதற்கு அனுமதித்தார். ஆனுல் தமது வேலைகளைச் செய்த வண்ணமே அவர்கள் முன் அமர முடியும் என்று நிபந்தனை விதித்திருந்தார்.

பக். 57 : இந்தியாவுக்குத் திரும்பும் வழியில் பிரான்ஸ், ஸ்விட்ஜர்லாந்து, இத்தாலி தேசங்களுக்குக் காந்தி விஜயம் செய்தார். பிரெஞ்சு ஞானி ரொமெயின் ரோலண்டுடன் ரோமாபுரியில் அவர் ஐந்து நாட்கள் தங்கி அளவளாவினுர். காந்தியின் ஜீவிய சரித்திரத்தை எழுதியும், அவரது கருத்துக்களை மேற்கு நாட்டாரிடையே பரப்பியும் ரோலண்ட் உதவினுர்.

பக். 60 : 1931 டிசம்பர் 28உ காந்தி பம்பாய் திரும்பினுர். அதற்கு முன்பு ஜவாஹர்லால்,

கபார்கான் உட்பட ஆயிரக்கணக்கான காங்கிரஸ்காரர்களைச் சர்க்கார் கைதுசெய்தனர். எல்லை மாகாணம், உத்தரப் பிரதேசம், வங்காளம் ஆகிய பிரதேசங்களில் அடக்குமுறை தாண்டவமாடியது. பம்பாயில் இறங்கிய அன்றே ஒரு பொதுக் கூட்டத்தில் காந்தி பேசினார். ஜனவரி 4உ அவரும் ஏரவாடா சிறையில் தள்ளப்பட்டார். "உங்கள் விலாசம் என்ன?" என்று பின்னொரு சமயம் கேட்டபோது, "ஏரவாடா ஜெயில்" என்று காந்தி பதிலளித்தார்! பலமுறை அங்கு வசிக்க நேர்ந்ததே இதற்குக் காரணம். ஜாதி ஹிந்துக்களையும் ஹரிஜனங்களையும் பிளவுபடுத்துவதற்கான வகுப்புவாரிப் பிரதிநிதித்வ முறையைப் பிரிட்டிஷ் சர்க்கார் அறிவித்தது. இதை எதிர்த்துச் சிறையில் 1932 செப்டம்பர் மாதம் 'சாகும்வரை' உண்ணாவிரதத்தைக் காந்தி மேற்கொண்டார். ஹரிஜன சேவை சம்பந்தமாகத் தம்மையும் தம் சகாக்களையும் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்காக மீண்டும் ஒருமுறை அவர் 21 நாட்கள் உபவாசம் இருந்தார். உண்ணாவிரதம் முடிவதற்குள், 1933 மே மாதம் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

1933 ஆகஸ்டில் காந்தியும் கஸ்தூரிபாயும் மறுபடி கைதாயினர். இடையூறின்றி ஹரிஜன சேவை செய்யத் தம்மைச் சர்க்கார் அனுமதிக்காததை ஆட்சேபித்து அவர் மீண்டும் உபவாசத்தை ஆரம்பித்தார். உபவாசம் முடிவதற்குள், அதே மாதத்தில், நிபந்தனையின்றி அவர் விடுதலை செய்யப்பட்டார்.

பக். 61: 1904 முதலே காந்திஜியின் அலுவல்களில் எல்லாம் கஸ்தூரிபாய் பங்காளியாக இருந்து வந்தார். முதலில் அவர் தமது பிடிவாதப்புருஷருக்குப்பணியநேர்ந்தது. பிறகு கணவரின் காரியங்களைத் தம் காரியமாகவும் அவர் கொண்டு ஒத்துழைக்கலானார். அன்னையாரும் பலமுறை சிறைபுகுந்தார்.

பக். 62: இந்தியா சுதந்திரம் பெறும்வரை சபர்மதி ஆச்ரமத்துக்குத் திரும்புவதில்லை என்று காந்தி சபதம் பூண்டார். அதனால் 1933 செப்டம்பரில் அவர் ஆச்ரமத்தை வர்தாவுக்கு மாற்றினார். ஹரிஜனசேவைக்காக அங்கிருந்து நவம்பரில் யாத்திரை புறப்பட்டார். பத்துமாத காலத்தில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் விஜயம் செய்தார்.

பக். 63: 1934 ஜனவரியில் பூகம்பத்தினால் பீஹாரில் பிரளய நாசம் ஏற்பட்டது. தென்னாட்டிலிருந்த காந்தி உடனே பீஹாருக்கு விரைந்தோடினார். ஒவ்வொரு கிராமத்துக்கும் கால் நடையாகச் சென்று மக்களின் கண்ணீரைத் துடைத்தார். "இந்த நாசம் உங்களுக்கு எதைப்போதிக்கிறது? ஹிந்து-முஸ்லிம், தீண்டாதார், உயர்ந்தோர் என்ற பேதங்கள் கிடையா என்பதையே போதிக்கிறது. உழையுங்கள், உழையுங்கள், உழையுங்கள். யாசகம் எடுக்காமல் உழையுங்கள்" என்று அவர் உபதேசித்தார். நிவாரண வேலைகளைக் கவனித்து வந்த ராஜேந்திர பிரஸாத்துக்குக் காந்தி பேருதவி புரிந்தார்.

பக். 64: 1934 அக்டோபரில் பம்பாய் காங்கிரஸ் நடந்தபோது காந்தியின் தலைமையில் அகில இந்திய கிராமக் கைத்தொழில்கள் சங்கம் ஒன்றை நிறுவத் தீர்மானிக்கப்பட்டது. "சத்திய, அஹிம்சை" மார்க்கத்தைக் கோட்பாடாகக் கொள்ளக் காங்கிரஸ் மறுத்ததால், காங்கிரஸின் நான்கணா உறுப்பினர் பதவியைக்கூடக் காந்தி துறந்து விட்டு, நிர்மாண வேலைகளில் ஒருமுகமாய் முனைந்தார்.

1935 மே மாதம் காந்தியும் கஸ்தூரிபாயும் பார்ஸாத் கிராமத்துக்கு விஜயம் செய்தனர். பிளேக் கொள்ளை நோயால் பீடிக்கப்பட்டிருந்த அப்பகுதியில் சர்தார் பட்டேல் நிவாரண வேலையில் ஈடுபட்டிருந்தார். கொள்ளை நோயைத் தீரமுடன் எதிர்க்கவேண்டும் என்றும், எல்லோரும் தோட்டி வேலை செய்யவேண்டும் என்றும் காந்தி போதித்தார். எலிகளையும் ஈக்களையும் அடியோடு ஒழிப்பதற்காக இவர் தெரிவித்த நிரந்தரப் பரிகாரங்களைச் சிலர் கடுமையாகக் கண்டித்தனர். ஆனால் சர்தார்பட்டேல் அவரது உறுதுணைவராக நின்று செயலாற்றினார்.

பக். 65–69: கிராமங்களின் கஷ்டங்களை நேரில் கண்டறிவதற்காக, சேகான் (சேவா கிராமம்) என்ற கிராமத்தைக் காந்தி தம் ஆராய்ச்சிக் கூடமாகத் தேர்ந்தெடுத்தார். வர்தாவிலிருந்து நான்கு மைலில் உள்ள அக்கிராமத்துக்கு 1936 ஏப்ரல் 30உ அவர் கால் நடையாகப் போய்ச் சேர்ந்தார். பல குடிசைகளும், ஆஸ்பத்திரியும், பால் பண்ணையும் அங்குத் தோன்றி ஒரு ஆச்ரமம் உருவாயிற்று. ஆச்ரமக் குடிசைகளில் காந்தியின் குடிலே சின்னஞ்சிறியது, ஆனால் மிகச் சுத்தமானது. அதன் வெளிச் சுவரைக் களிமண்ணால் ஆன சர்க்காவின் புடைப்பு உருவம் அலங்கரித்தது. சேவா கிராமத்தின் கீர்த்தி உலகெங்கும் பரவியது. நாட்டின் கதியை நிர்ணயித்த பல முக்கியமுடிவுகள் அங்கு வகுக்கப்பட்டன. வெளி நாட்டார் உட்பட பிரமுகர்கள் எல்லாம் அக் குடிலில்தான் காந்தியைப் பேட்டி கண்டனர்.

காந்தியின் அன்றாட அனுஷ்டானங்கள் கண்டிப்பானவை. காலை 5 மணிக்கு முன்னாலேயே கண்விழித்து விடுவார். 6 மணி முதல், கடிதப் போக்குவரத்துக்களிலும், "ஹரிஜன்" பத்திரிகைக்குக் கட்டுரைகள் வரைவதிலும் முனைவார். காலை 5 மணிக்கு முதல் பானம், மாலை 5 மணிக்குக் கடைசி ஆகாரம். காலை மாலைகளில் உலாவச் செல்லும்போது நண்பர்களுடனும் விருந்தாளிகளுடனும் பேசவேண்டியவைகளைப் பேசித் தீர்த்துவிடுவார். மத்தியானவேளையில் நூற்பார். கஸ்தூரிபாயும் நூற்பதில் தவறுவதில்லை. சமையலறை, வயல், வர்தாவில் உள்ள தோல் ஆலை முதலியவற்றின் சில்லறை விஷயங்களைக்கூடக் காந்தி சிரத்தையுடன் கவனிப்பார். நோய்வாய்ப்படும் ஆச்ரமவாசிகளையும், கால்நடைப் பண்ணையையும் அவர் தினந்தோறும் பார்வையிடுவார். புத்திளங் கன்றுகளைப் பிறந்தவுடன் பார்க்கப் போய்விடுவார். தினந்தோறும் இருமுறை பிரார்த்தனை நடத்தக் காந்தி மறந்ததே இல்லை.

பக். 70 : அவருக்கு வேண்டிய பணிவிடைகளைக் கஸ்தூரிபாய் பக்தி சிரத்தையுடன் செய்து வந்தார். நாடோறும் கணவருக்குக் கால் பிடிப்பார். அதே போல் கஸ்தூரிபாய் அசௌக்கியமடைந்தால் காந்திதான் அவருக்கு மருத்துவத்தாதி.

ஆச்ரமவாசிகளுக் கெல்லாம் "பா" வாக (அன்னையாக) கஸ்தூரிபாய் விளங்கினார். எல்லோரிடமும் அவர் அன்பைச் சொரிந்தார். காந்தியுடன் நிழல்போல கூடச் சென்றார் அவர். எத்தகைய அபூர்வ ஜோடி! மக்களின் நலமே இருவருக்கும் குறிக்கோள். இருவருக்கும் இடையே பூரண நல்லுணர்வும், அன்பும், மரியாதையும் நிலவின.

பக். 71 : தீண்டாமை ஒழிப்புவேலை சம்பந்தமாக 1937 ஜனவரியில் தென் இந்தியாவுக்குக் காந்தி விஜயம் செய்தார். சத்தியாக்ரஹமும், தீவிர கிளர்ச்சியும் நடத்தியதன் விளைவாக அங்குப் பல ஆலயங்களில் ஹரிஜனப் பிரவேசம் சாத்தியமாயிற்று.

அதே ஆண்டில் பல மாகாணங்களில் ஆட்சிப் பொறுப்பைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. அப்போது அரசியல் கைதிகளின் விடுதலையில் காந்தி கவனம் செலுத்தலானார்.

பக். 72–73 : கடுமையான வேலை காரணமாக 1937 இறுதியில் காந்தியை இரத்த அழுத்த நோய் பீடித்தது. ஜுஹூ கடல்வாச ஸ்தலத்தில் அவர் ஓய்வெடுக்கச் சென்றார். காலில் செருப்புக்கூட இல்லாமல் கடற்கரையில் அவர் உலாத்துவார்; வழியில் குழந்தைகளுடன் கொஞ்சிவிளையாடுவார்.

பக். 74 : 1938 பிப்ரவரியில் சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் ஹரிபுரா காங்கிரஸ் நடைபெற்றது. காந்தியின் வேண்டுகோள் பேரில் நந்தலால் போஸ் அம்மகாநாட்டு ஸ்தலத்தைக் கலைக்கோவிலாக நிர்மாணித்திருந்தார். உ. பி., பீஹார் மந்திரிசபை நெருக்கடிகள், சிறுபான்மையோர் உரிமைகள், அரசியல் கைதிகளின் விடுதலை முதலியவை சம்பந்தமாகப் பல முக்கிய தீர்மானங்களை மகாசபைக் கூட்டம் நிறைவேற்றியது.

பக். 75–79 : கவர்னர்களின் விசேஷ அதிகாரங்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருந்த ராஜீய நெருக்கடி சுமுகமாகத் தீர்ந்தது. காங்கிரஸ்-லீக் ஒத்துழைப்புக்கு வழிசெய்வதற்காகப் பிப்ரவரியில் ஜின்னாவைக் காந்தி சந்தித்துப் பேசினார்; பலன் கிடைக்கவில்லை. பிறகு பட்டாணியரின் எல்லை மாகாணத்துக்கு அவர் புறப்பட்டார். பஞ்சாபில் ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனிலும் ஜனங்கள் அளித்த ஆரவார வரவேற்புகள் காந்திஜியைத் திணற வைத்தன. நிதானமாக நடக்கும்படி ஜனக் கூட்டங்களைக் கூப்பிய கரங்களுடன் காந்தி கேட்டுக்கொண்டார்.

எல்லை மாகாணத்தில் பல கிராமங்களுக்குக் காந்தி விஜயம் செய்து அஹிம்ஸா தர்மத்தைப் பறைசாற்றினார். கபார் கானின் செஞ்சட்டைச் சீடர்கள் (குதாய் கித்மத்கார்) இரவு பகலாகப் பாடுபட்டுக் காந்தியின் சுற்றுப் பிரயாணத்தை வெற்றிகரமாக்கினர்.

எல்லை மாகாணச் சுற்றுப் பிரயாணம் முழுவதிலும் காந்தியுடன் பாத்ஷாகான் (கபார் கான்) சென்றார். அவர் காந்தியின் உத்தமச் சீடர். சத்தியம், அஹிம்சை, தீரம், நேர்மை என்ற பண்புகளின் உருவமாகத் திகழ்ந்த அவரை "எல்லைக் காந்தி" என்று எல்லோரும் அழைத்தனர். தட்சசீலத்தில் அவரிடம் காந்தி விடைபெற்றபோது இருவர் கண்களிலும் நீர்மல்கியது. எல்லை மாகாணக் கிராமங்களில் போய் வாழ வேண்டும் என்று கூடக் காந்தி ஆசைப்பட்டார்.

பக். 80 : 1939-ல் ராஜ்கோட்டில் மன்னருக்கும் மக்களுக்கும் இடையே பூசல் மூண்டது. மன்னர் வாக்குமீறி நடந்ததைக் கண்டித்துக் காந்தி ராஜ்கோட்டில் மார்ச் 3வ "சாகும் வரை" உபவாசம் மேற்கொண்டார். வைஸ்ராய் தலையீட்டின்பேரில் மத்தியஸ்தப் பைசலுக்கு மன்னர் இணங்கவே,

உண்ணுவிரதத்தைக் காந்தி நிறுத்தினுர். பின்னர் வைஸ்ராய் லின்லித்கோவைச் சந்திப்பதற்காக அவர் டில்லிக்குச் சென்ருர்.

அக்காலங்களிலெல்லாம் காரியதரிசி மகாதேவ் தேசாய், காந்திக்குப் பேருதவி புரிந்துவந்தார். முதலாவது ஒத்துழையாமைப் போராட்டத்திற்கு முன் அவர் காந்தியின் சீடராகச் சேர்ந்தவர். அறிவும், திறமையும், நாணயமும், நம்பிக்கையும் நிறைந்த காரியதரிசியாக விளங்கினுர்.

பக். 82–83 : *1939* செப்டம்பரில் இரண்டாவது உலக மகா யுத்தம் மூண்டது. காந்தியையும் ஜின்னுவையும் வைஸ்ராய் அழைத்துப் பேசினுர். பிரிட்டனிடம் காந்திக்கு அனுதாபம் இருந்த போதிலும் இந்தியாவை நிர்ப்பந்தமாகயுத்தத்தில் மாட்டுவதை எதிர்த்தார். அதைத் தொடர்ந்து வர்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கும் காந்திக்கும் இடையே கருத்துவேற்றுமை ஏற்பட்டது. தேசியப் பாதுகாப்பு விஷயத்தில் அஹிம்சைக்கு இடம் இல்லை என்று கமிட்டி தீர்மானித்ததைக் காந்தி ஏற்கவில்லை. இவ்விதம் முதல் முதலாகக் காங்கிரஸும் காந்தியும் தனித்தனிப் பாதையில் செல்ல நேர்ந்தது.

பக். 84–85 : மறுபடியும் வைஸ்ராய் அழைத்ததன் பேரில் ஸிம்லாவிற்குத் காந்தி சென்ருர். யுத்தத்தில் இந்தியாவின் நிலைமை பற்றி அவர்கள் நீண்ட நேரம் விவாதித்தனர். ரிக்ஷாவில் செல்வதைக் காந்தி கட்டோடு வெறுத்தபோதிலும் வைஸ்ராய் மாளிகைக்குச் செல்ல, தள்ளாமை காரணமாக, ஒரு ரிக்ஷாவை உபயோகிக்க நேர்ந்தது.

முக்கியமான அரசியல் பிரச்னைகளில் மூழ்கியிருந்தகாலங்களில்கூட ஹரிஜனநிதி சேகரிக்கக் காந்தி மறந்தது கிடையாது.

பக். 86–87 : *1940* பிப்ரவரியில் காந்தியும் கஸ்தூரிபாவும் சாந்திநிகேதனில் இருதினங்கள் தங்கினர். அப்போதுவயோதிக டாகூரின் உடல் நிலை நலிய ஆரம்பித்திருந்தது. மாந்தோப்பு ஒன்றில் காந்தி தம்பதிகளுக்கு அவர் வரவேற்பு உபசாரம் அளித்தார். விசுவபாரதியைக் காந்தி பராமரிக்க வேண்டுமென்று டாகூர் அப்போது கேட்டுக் கொண்டார். சாந்திநிகேதனின் கலையழகில் காந்திக்கு எப்போதும் ஈடுபாடு உண்டு. அந்நிலையத்துக் கலைஞரான நந்தலால் போஸ், பைஸ்பூரிலும், ஹரிபுராவிலும் காங்கிரஸ் நகரங்களை நிர்மணித்து உதவியவர்.

பக். 88–90 : சாந்திநிகேதனிலிருந்து திரும்பும் வழியில் கல்கததாவில் நோய்வாய்ப்பட்டிருந்த தீனபந்து ஆண்ட்ரூஸைக் காந்தி பார்த்தார். காந்தியின் அருமந்த ஆங்கிலேய நண்பர்களுள் ஒருவர் அவர்.

1940 அக்டோபரில் தனி நபர் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிக்கக் காந்தி தீர்மானித்தார். நிர்மாண வேலைகளிலேயே அனவரதமும் ஈடுபட்டிருந்த வினேபா பாவே முதலாவது சத்தியாக்கிரகியாகக் காந்தியால் தேர்ந்தெடுக்கப்பட்டார். யுத்தத்தை ஆட்சேபித்துப் பேசிய வினேபா கைது செய்யப்பட்டார். இன்னும் ஏராளமான சத்தியாக்கிரகிகளும் இவ்வாறே சிறை புகுந்தனர்.

பக். 91 : அந்த இயக்கம் நடந்து கொண்டிருந்த காலத்தில் அலகாபாத்தில் கமலா நேரு ஆஸ்பத்திரிக்குக் காந்தி கால்கோள் விழா நடத்தினுர்.

பக். 92 : மகாயுத்தத்தில் ஜப்பான் *1941* டிசம்பரில் சேர்ந்தது. அடுத்த மாதம் காரியக் கமிட்டி வர்தாவில் கூடி ஆலோசித்தது. யுத்தம் சம்பந்தமாகக் காங்கிரஸின் கொள்கையை நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரப்பவேண்டும்என்றும் எத்தகைய கஷ்டத்தையும் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும் என்றும் காந்தி கூறினுர். மார்ச் மாதத்தில் பர்மாமீது ஜப்பான் படையெடுத்தது; இந்தியாவிற்கும் அபாயம் வரும்போல் இருந்தது. பிரிட்டிஷ் சர்க்காரின் தூதராக வந்த ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் இந்தியாவிற்கு அதிகாரம் எதையும் வழங்காமல் காங்கிரஸின் ஒத்துழைப்பை மட்டும் நாடினுர். அவரது திட்டத்தைப் "பின் தேதியிட்ட செக்" என்று காந்தி வர்ணித்தார்.

பக். 93 : *1942* ஆகஸ்ட் 8ல காந்தி முன்னிலையில் பம்பாயில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடி "வெள்ளையனே வெளியேறு" என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. பிரிட்டனைத் "திணற வைக்கக் கூடாது என்ற எனது கொள்கைக்கு வரையறை உண்டு. அதாவதுநமது கௌரவத்திற்கும் பந்தோபஸ்திற்கும் உட்பட்டதே அக்கொள்கை. எனது மென்னியை இறுக்கித் தண்ணீரில் மூழ்கடிக்க ஒருவன் முயன்ருல் போராடி அவனது பிடியிலிருந்து தப்புவதற்கு எனக்கு உரிமையில்லையா? பூரண சுதந்திரத்திற்கு இம்மி குறைந்தாலும் ஏற்க மாட்டேன். இதோ உங்களுக்கு ஒரு மந்திரத்தை உபதேசிக்கிறேன். 'செய் அல்லது செத்துமடி' என்பதே அந்தத் தாரக மந்திரம். இந்தியாவை விடுதலை செய்வோம்; இல்லையேல் அம்முயற்சியில்

உயிரைவிடுவோம். நிரந்தர அடிமைகளாக உயிர்வாழப்போவதில்லை'' என்று முழங்கினர் காந்தி.

மறுநாட் காலை காந்தியும் காரியக் கமிட்டிமெம்பர்களும் நூற்றுக்கணக்கான காங்கிரஸ் ஊழியர்களும் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் ஒரு சட்ட விரோத ஸ்தாபனம் என்று சர்க்கார் அறிவித்தது. எனினும்,மக்கள் மலையாமல் போராடினர். புரட்சிப் புயலை ஒடுக்க அடக்குமுறைப் பாணங்களைச் சர்க்கார் ஏவி விட்டது.

பக். 96–98: புனவில் உள்ள ஆகாகான் அரண்மனையில் காந்தி காலவரம்பின்றிக் காவலில் வைக்கப்பட்டார். ஆகஸ்ட் 9௨ ஒரு கூட்டத்தில் பேசவிருந்த கஸ்தூரிபாவும் கைதாகி, காந்தியுடன் சிறைவைக்கப்பட்டார். அவர்களுடன் சிறையிருந்த மகாதேவ் தேசாய் ஒரு வாரத்துக்குள் உயிர் துறந்தார். இந்தத் துக்கத்தால் காந்தியும் கஸ்தூரிபாவும் இடிந்து போயினர்.

நாட்டில் கலகத்தைத் தூண்டிவிட்டதாகக் காந்தி மீது சர்க்கார் குற்றஞ்சாட்டினர். இதைக் காந்தி மறுத்ததோடு, சர்க்கார்தான் ''மிருகத்தனமான பலாத்காரத்தை'' கையாண்டதாகப் பதிலுக்குக் குற்றஞ்சாட்டினர். இதைக் கண்டிப்பதற்காக 21 தின உபவாசத்தையும் அவர் மேற்கொண்டார். இதற்கிடையே மன அதிர்ச்சி காரணமாகக் கஸ்தூரிபாவின் தேகம் நலிய ஆரம்பித்தது. பாடபோதனை, பஜனை, டேபிள்-டென்னிஸ் போன்ற விளையாட்டுக்கள் ஆகியவற்றின் மூலம் அவரது துக்கத்தை மாற்றுவதற்குக் காந்தி பாடுபட்டார்; ஆனல் இவை பலனளிக்கவில்லை; 1944 பிப்ரவரி 22௨ காந்தியின் 63 வருஷத் துணைவியான கஸ்தூரிபா காலமானர். சிறைக் காம்பவுண்டுக்குள் அவரது சடலத்தைத் தகனம் செய்து, அஸ்தியை மகாதேவ் தேசாயின் அஸ்தியுடன் சிறைக்குள் பத்திரப்படுத்தினர். கஸ்தூரிபா, மகாதேவ் இருவரது சமாதிகளுக்கும் காந்தி தினந்தோறும் போய்வந்தார். இருவரது மரணமும் அவரை உருக்கிவிட்டது. எனினும் ''பாவும் மகாதேவும் சுதந்திரத்தேவியின் பலிபீடத்தில் தங்கள் உயிரை அர்ப்பணித்துவிட்டனர். அவர்கள் அமரர்கள்'' என்று காந்தி குறிப்பிட்டார்.

பக். 99: காந்திக்கு மலேரியா ஜுரம் கண்டதால் 1944 மே மாதம் விடுதலை செய்யப்பட்டார். சிகிச்சைக்காக அவர் பம்பாயில், ஜுஹுவில் சென்று தங்கினர். பேசுவதைக்கூடக் கட்டுப்படுத்திக் கொண்டு அவர் ஓய்வு எடுத்தார்.

பக். 100: நிர்மாண வேலைகளில் காந்தியின் நெருங்கிய சகாக்களில் ஒருவராகத் தக்கர் பாபா விளங்கினர். ஹரிஜன சேவைக்கே வாழ்க்கையை அர்ப்பணித்தவர் அவர்.

ஜுலையில் மலைவாச ஸ்தலமான பஞ்சகனியில் காந்தி தங்கினர். பலவீனராக இருந்தும் அன்றாட உலாத்தலை அவர் நிறுத்தவில்லை; உலாவும்போது சகாக்களுடன் விவாதம் நடத்துவதும் நிற்கவில்லை.

பக். 101: ஜின்னவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக 1944 செப்டம்பர் 9௨ பம்பாய்க்குக் காந்தி திரும்பினர். ஜின்னவின் ஜாகைக்குஅவர்சென்று சென்று இரண்டு வார காலம் அயர்வின்றி விவாதித்தும் உடன்பாடு ஏற்படவில்லை.

பக்.102–104: நாட்டின் தனிப்பெருந் தலைவர் என்ற முறையில் அரசியல் விவகாரங்களில் காந்தி முனைந்திருந்த போதிலும், நிர்மாண வேலைகளையும் நிர்மாண வேலை ஸ்தாபனங்களையும் அவர் ஒரு கணங்கூட மறக்கவில்லை. சர்க்காவில் தினந்தோறும் தவருமல் நூற்று வந்தார். சில சமயங்களில் தக்ளியிலும், தனுஷ் தக்ளியிலும் நூற்றுர். தமது ஜயந்தியைச் ''சர்க்கா ஜயந்தி'' என்று அவர் குறிப்பிடுவதுண்டு. கதர் மீது அவ்வளவு உயிர் அவருக்கு.

''சுதந்திரம்,அஹிம்சையின் சின்னமான சர்க்காவின் கீதம் வீடெல்லாம் ஒலிக்கச் செய்வதுதான் உண்மையான கொண்டாட்டம்'' என்பது அவர் கருத்து. காந்தி ஜயந்தி அன்று நாடெங்கும் நூற்பு யக்ஞம் நடத்தி, அவருக்கு நூல் சிட்டங்களை மலை மலையாகப் பரிசளித்தனர் மக்கள். டில்லியில் காந்தி தங்கியிருந்த ஜாகையில் தினந்தோறும் முக்கிய கூட்டங்களும் பேட்டிகளும் நடந்த வண்ணம் இருந்தன. காந்தித் தாத்தாவுடன் விளையாடக் குழந்தைகளும் கூட்டம் கூட்டமாக வந்தனர். அவர்கள் மத்தியில் அவரும் குழந்தையாகிவிடுவார். உலாவுவதற்கு ''ஊன்று கோல்களா''கவும் அவர்களைப் பயன்படுத்திக்கொண்டார்.

பக். 105: இந்திய தேசிய ராணுவ அதிகாரிகள் சிலர் அவரைப் பேட்டி காண வந்தனர். நேதாஜி போஸ் காட்டிய வழியில் வகுப்பு ஒற்றுமைக்காகப் பாடுபடவேண்டும் என்றும் நிர்மாண வேலைகளில் ஈடுபடவேண்டும் என்றும் அவர்களுக்குக் காந்தி போதித்தார்.

பக். 108–109: 1945 மே மாதத்தில் ஐரோப்பாவில் யுத்தம் முடிந்தது. அரசியல் உடன்பாடு காண்பதற்காக அடுத்த மாதத்தில்

17660

காந்தியை வைஸ்ராய் பேச்சுக்கு அழைத்தார்; ஒருமாத காலம் சம்பாஷணை நடந்தது. வெகுஜனப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தும் வழக்கத்தை அப்போது காந்தி ஆரம்பித்தார். எல்லோரும் தாளம் பிசகாமல் 'ராம்துன்' பாடவேண்டும் என்பது அவரது கண்டிப்பான கட்டளை. அஹிம்சை, கட்டுப்பாடு உணர்ச்சிகளை ஊட்டும் சாதனமாக இதை அவர் கருதினார். பிரிட்டிஷார் ஆட்சிப் பொறுப்பைக் கைவிடும் காலம் வரும் என்றும், மக்கள் கட்டுப்பாடுடன் இராவிடில் ஆட்சியை ஏற்கத் தெரியாமல் விழிக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

பக். 110–111: பஞ்சத்தில் 50 லட்சம் பேரைப் பலி கொடுத்த வங்காளத்துக்கு ஆறுதல் கூறப் போகவேண்டும் என்று காந்தி தாம் விடுதலையான நாள் முதல் ஆவல் கொண்டிருந்தார். அவரது அசௌக்கியம் காரணமாக 1945 நவம்பரில்தான் கல்கத்தாவுக்கு விஜயம் செய்ய முடிந்தது. டிசம்பரில் வங்காளக் கவர்னரை அவர் பலமுறை சந்தித்து அரசியல் நிலைமை பற்றியும், காவல் கைதிகளின் விடுதலை சம்பந்தமாகவும் விவாதித்தார்.

டம்டம் சிறையில் காவல் கைதிகளையும் அவர் கண்டுபேசினார். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அவரை இரட்சகராகக் கருதினர். கைதிகள் விடுதலைப் பிரச்னை பற்றி அவரைக் கேட்டபோது, "தேசபக்தர்களுக்குச் சுதந்திர மாளிகையின் ஆசார வாசல்தான் சிறைச்சாலைகள். அடிமை இந்தியாவே ஒரு பிரம்மாண்டமான சிறைதானே!" என்று பதிலளித்தார் காந்தி.

கல்கத்தாவில் டிசம்பரில் காரியக் கமிட்டிக் கூட்டம் நடந்தது. அக்கூட்டத்துக்குப் பின், காந்தி, சாந்திநிகேதனுக்குச் சென்றார். குருதேவர் டாகூரை இழந்து அந்நிலையம் தவித்துக் கொண்டிருந்தது. விசுவ பாரதியின் நிலைமை சம்பந்தமாக நிர்வாகிகளுடன் காந்தி விவாதித்தார். வேதனைப் படும் உலகத்துக்குச் சாந்தியை அளித்தவர் குருதேவர் என்று அவர் குறிப்பிட்டார். "தமது கீதங்களால் மாத்திரமன்றி, பேனாவாலும், தூரிகையாலும் கூட அவர் இந்தியாவுக்கு உலகெங்கும் புகழ் தேடித்தந்தார். கதகதப்பான இறக்கைகளால் காத்து இரட்சிக்கும் தாய்ப் பறவையை இழந்துவிட்டோம்" என்று அவர் கூறினர்.

பக். 112: 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் வீரம் விளைத்து நின்ற மிதுனபுரிக்குக் காந்தி பின்னர் சென்றார். அங்கிருந்து 1946 ஜனவரியில் அஸ்ஸாமுக்குச் சென்று ஒரு வாரம் தங்கினர். அஸ்ஸாம் கூட்டங்களில் எல்லாம் நிர்மாணத் திட்டத்தின் முக்கியத்துவத்தையே அவர் வற்புறுத்தினர். 25 லட்ச ரூபாய் முதல் போட்டால் ஐந்தரைக் கோடி ரூபாய் வருமானம் அளிக்கக்கூடிய திட்டம் இது என்று அவர் சுட்டிக் காட்டினர். "இந்தியா நிர்வாணமாக இருக்கிறது. ஆடை உடுத்தி இதை மறைக்கவேண்டும். இதற்குச் சர்க்காவை விடச் சிறந்த சாதனம் ஒன்றை யாராவது காட்டினல் கைராட்டையை இன்றே கைகழுவ நான் தயார்" என்றார் காந்தி.

பக். 113: நிர்மாண ஊழியர்களின் மகாநாட்டை ஆரம்பித்துவைக்கவும், வேறு பல முக்கிய அலுவல்களைக் கவனிப்பதற்காகவும் காந்தி அஸ்ஸாமிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டார். ரயிலில் அவருக்காக ஒரு தனிப் பெட்டி சேர்க்கப்பட்டது. பொது ஜனங்களுக்குக் காந்தி தரிசனம் அளித்துப் பேசுவதற்காக அதில் ஒரு மேடையை அமைத்து ஒலிபெருக்கியையும் பொருத்தியிருந்தனர். மதுரை மீனாக்ஷி கோவிலுக்குச் சென்று அவர் தரிசித்தார். ஹரிஜனப் பிரவேசத்துக்குப் பிறகு அவ்வாலயத்துக்கு அவர் சென்றது அதுவே முதல் தடவை. மதுரையில் ஐந்து லட்சம் மக்கள் காந்தியைத் தரிசிக்கக் கூடினர்.

1946 மார்ச் மாதம் பம்பாயில் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் காந்தி கலந்து கொண்டார். இந்திய கடற்படையினர் கலகம், உணவுக் கஷ்டம் முதலிய பிரச்னைகளை அக்கூட்டம் ஆராய்ந்தது.

பக். 116–117: ஏப்ரல் 1உ டில்லிக்குக் காந்தி போய்ச் சேர்ந்தார். இந்திய அரசியல் கட்சிகளுடன் சம்பாஷணை நடத்துவதற்காகப் பிரிட்டனிலிருந்து வந்திருந்த "மந்திரிகள் தூது கோஷ்டி"யையும், வைஸ்ராயையும் அங்கு காந்தி சந்தித்துப்பேசினர். கட்சிகளிடையே ஒற்றுமை காண்பதற்கு நடந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இப் பேச்சுவார்த்தை சம்பந்தமாக எழுந்த அகால ஹேஷ்யங்களைக் காந்தி வன்மையாகக் கண்டித்தார்.

தூதுகோஷ்டியில் இருந்த ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், லார்டு பெதிக் லாரன்ஸ், அலெக்ஸாண்டர் ஆகியோருடன் காந்தி மனம்விட்டுப் பேசினர். அதிகாரத்தைக் கைவிட வழி செய்வதற்காகவே அவர்கள் வந்திருப்பதற்காகக் காந்தி நம்பினர்.

பக். 118: காந்தி டில்லியில் இருந்தபோது நோய் வாய்ப்பட்டிருந்த பண்டித மாளவியாவைப் பார்க்கச் சென்றார். இருவரும் 1915

முதலே நெருங்கிய சகாக்கள், வைதிக விதிகளில் மாளவியாஜிக்கு உறுதியான நம்பிக்கை இருந்தபோதிலும், ஹரிஜன முன்னேற்ற வேலையில் அவர் காந்தியுடன் நன்கு ஒத்துழைத்தார்.

தேசியப் பிரச்னைகள் பற்றி ஜவாஹர்லால் நேரு அடிக்கடி காந்தியைக் கலந்து பேசிவந்தார். அவரைத் தமது அரசியல் வாரிசாகக் காந்தி தேர்ந்தெடுத்திருந்தார். நாட்டின் மாபெரும் பொறுப்பை ஏற்பதற்காக 1920 முதலே அவரைக் காந்தி தயாரித்து வந்தார். காங்கிரஸ் அக்கிராசனராகவும், காரியதரிசியாகவும் ஜவாஹர்லால் நேரு பலமுறை செயலாற்றினுர். இருவருக்கும் இடையே அவ்வப்போது கருத்து வேற்றுமை ஏற்பட்டதுமுண்டு; ஆனால் அன்புப் பாசம் மாத்திரம் அறுந்ததே கிடையாது.

பக். 119: டில்லியில் ஹரிஜனங்கள் வாழும் "பங்கிக் காலனி"யிலேயே காந்தி தங்கி வந்தார். தேசிய வாரத்தில் முதல்-கடைசி தினங்களாகிய ஏப்ரல் 6-13 தேதிகளில் காந்தி முகாமில் உபவாசமும் நூற்புயக்ஞமும் நடைபெற்றன; பிரபல தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

பக். 120-123: டில்லியில் காந்திக்கு வேலை கடுமையாக இருந்தது; அதிகாலை முதல் அகால இரவு வரை ஓய்வே யில்லை. முக்கியத் தலைவர்களுடன் அவர் மணிக்கணக்காக மந்திராலோசனை நடத்தி வந்தார்.

1946 ஜூலையில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடியது. அரசியல் நிர்ணய சபையை அமைக்கவேண்டும் எனப் பிரிட்டிஷ் மந்திரிகள் கோஷ்டி தெரிவித்த யோசனையை ஏற்றுக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது. அக்கோஷ்டியுடன் சம்பாஷணை நடத்தியவர்களுள் முக்கியமானவர்கள் ஆஜாத், பட்டேல், நேரு ஆவர்.

இடைக்கால சர்க்கார் ஒன்றை அமைக்குமாறு வைஸ்ராய் தெரிவித்த திட்டத்தைக் காங்கிரஸ் ஏற்றது. கூட்டு மந்திரி சபை அமைக்கலாம் என ஜின்னாவிற்கு நேரு வேண்டுகோள் அனுப்பினுர். ஆனால் ஜின்னா அதற்குச் சம்மதியாமல் ஆகஸ்ட் 16-ந் தேதியை "நேரடி நடவடிக்கை தினமாக" அனுஷ்டிக்கும்படி முஸ்லிம் லீகிற்குக் கட்டளையிட்டார். இதன் விளைவாக நாட்டின் பல பாகங்களில், குறிப்பாக வங்காளத்தில், பயங்கரமான, வகுப்புக் கலகம் மூண்டது. பலாத்காரம் தலைவிரித்தாடியது. நவகாளியிலும், கல்கத்தாவிலும் ஹிந்து—முஸ்லிம்கள் பரஸ்பரம் ரத்தக் களறியில் இறங்கினர்; எண்ணற்ற நபர்கள் உயிர் இழந்தனர்; கணக்கற்ற பொருள் சேதம் ஏற்பட்டது.

பக். 124-130: கல்கத்தா மார்க்கமாக நவகாளிக்குச் செல்லவேண்டும் என்று அக்டோபர் மாதத்தில் காந்தி தீர்மானித்தார். தேக பலவீனத்தையும் பிரயாணக் கஷ்டத்தையும் நிலைமையின் சிக்கலையும் அவர் பொருட்படுத்தவில்லை. "'இருள் சூழ்ந்த இரவு, வீட்டிலிருந்து வெகு தூரம் வந்துவிட்டேன்; கடவுளே நீர்தான் வழிகாட்ட வேண்டும்' என்ற (ஆங்கில) பாசுரத்தை முழு உண்மையுடன் நான் இப்போது பாடமுடியும்" என்று அவர் குறிப்பிட்டார்.

நவம்பர் மாதத்தில் நவகாளிக்குக் காந்தி போய்ச் சேர்ந்தார். கஷ்டநஷ்டம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி தைரியம் ஊட்டுவதற்காக அவர் கால்நடையாக, கிராமம் கிராமமாக யாத்திரை சென்றுர். சென்ற இடம் எல்லாம், பயங்கர நாசக் காட்சிகளைக் கண்டார். அவர் நெஞ்சம் நெக்கு நெக்காய் உருகியது. கிராமவாசிகளின் மண் குடில்களில் தங்கினுர். ஒற்றையடிப் பாதைகளிலும், வயல் வரப்புகளிலும், மூங்கில் பாலங்களிலும் அண்ணல் திருவடி நோக நடந்து சென்றுர். ஒவ்வொரு கிராமத்திலும் ஜனங்கள் அவரிடம் ஓடோடி வந்து தங்கள் சோகக் கதைகளைச் சொல்லிப் புலம்பினர்.

77 வயதுக் கிழவரான காந்தி, நவகாளியில் தினசரி 18 மணி நேரம் வேலை செய்தார். அதிகாலையில் 4 மணிக்கு, சில தினங்களில் 2 மணிக்குக் கூட, அவர் எழுந்துவிடுவார். கடிதங்களுக்குப் பதில் எழுதுவதை முதலில் கவனிப்பார். பிறகு பிரார்த்தனை நடத்துவார். சிரத்தை மிகுந்த மாணவனைப் போல ஒவ்வொருநாள் காலையிலும் வங்காளி பாஷையைக் கற்பார். ஏழைகளின் குடிசைகளுக்கும் அகதி முகாம்களுக்கும் நேரில் சென்று சாந்தி அளித்தார். மாசு படுத்தப்பட்ட சில ஆலயங்களில் அவர் மறுபடியும் விக்கிரகப் பிரதிஷ்டை நடத்தி வைத்தார். மக்களைப் பீடித்திருந்த அச்சம் மறைந்தது; துன்ப இருள் விலக ஆரம்பித்தது. ஜனங்கள் அழுது புலம்புவதற்குப் பதில் காந்தியுடன் நாம சங்கீர்த்தனம் பாட ஆரம்பித்தனர்.

காந்தி தமக்குப் பிரியமான 'ராம்துன்' பஜனாவளியில் புதிதாக இரு அடிகளைச் சேர்த்துக் கொண்டார். "ஈஸ்வர் அல்லா, தேரே நாம்; சப்கோ ஸன்மதி தே பகவான்" என்பனவையே அந்தப் புதிய, பொருத்தமான அடிகள் (ஈஸ்வரன்,

அல்லா என்பவை எல்லாம் உமது நாமங்களே; பகவானே எங்கள் அனைவருக்கும் நற்புத்தியை அருளும்—என்பது அவற்றின் பொருள்.)

பக். 131–133: வங்காளக் கலகத்திற்குப் பதில்-நடவடிக்கையாகப் பீஹாரில் முஸ்லிம்களை ஹிந்துக்கள் பழிவாங்க ஆரம்பித்தனர். ஹிந்து-முஸ்லிம் என்ற பேதம் அறியாத காந்தி உடனே நவகாளியிலிருந்து பீஹாருக்கு விரைந்தோடினர். 1947 மார்ச் 5உ அவர் பாட்னுவை அடைந்தார். பீஹார் சுற்றுப் பிரயாணத்தில் அவருடன் கபார் கானும் கலந்து கொண்டார். தீரத்துக்கும், தியாகத்துக்கும், சேவைக்கும் பெயர் போனவரான பேராசிரியர் அப்துல் பாரி, சாந்தி சேவையில் காந்திக்கு உதவி புரிந்தார். பேராசிரியர் பாரியைக் கள்ளக் கடத்தல் கோஷ்டி ஒன்று சுட்டுக் கொன்று விட்டது. அவரது குடும்பத்தாருக்குக் காந்தி ஆறுதல் கூறி அவரது உன்னத உதாரணத்தைப் பின்பற்றும்படி அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஹிந்துக்கள் தங்கள் குற்றத்தைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்டு, கஷ்டம் அடைந்தவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க வேண்டும் எனக் காந்தி கோரினர். நவகாளி அதிக்கிரமத்தைப் பீஹார் தடுத்து நிறுத்தி விட்டதாக ஹிந்துக்கள் நினைப்பது தவறு என்றும்; மிருகத்தனத்தை மிருகத்தனத்தால் வெல்ல முடியாது என்றும்; துவேஷம் இன்றிச் சாகத் துணிவதன் மூலமே அதை வெல்ல முடியும் என்றும் காந்தி போதித்தார். பழிவாங்குவது கோழைத்தனம் என்றும் அதன் மூலம் கலாச்சாரத்தையோ மதத்தையோ சுதந்திரத்தையோ பாதுகாக்க முடியாது என்றும் அவர் எச்சரித்தார்.

பக். 134: ஆசிய உறவு மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக மார்ச் மாத இறுதியில் காந்தி டில்லிக்குப் புறப்பட்டார். "ஆசியாவின் போதனை என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். அன்பு, சத்தியம் என்பதுதான் மேற்கு நாடுகளுக்கு நீங்கள் அளிக்கக்கூடிய போதனை" என்று அவர் மகாநாட்டில் கூறினர்.

பக். 135: கடைசி பிரிட்டிஷ் வைஸ்ராயான லார்டு மவுண்ட்பாட்டனை டில்லியில் காந்தி சந்தித்துப் பேசினர். நாட்டில் கலகத்தை நிறுத்திச் சாந்தியை ஏற்படுத்தக்கூடிய மாபெரும் சக்தி காந்திதான் என்று வைஸ்ராய் கருதினர்.

பக். 136: 1947 ஜூனில் தேசப் பிரிவினை தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்வதற்காக டில்லியில் அ. இ. கா. க. கூடியது. அங்கு காந்தி தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:- "இந்தியாவைப் பிரிவினை செய்வதை ஆயுள் முழுவதும் நான் உறுதியுடன் எதிர்த்து வந்திருக்கிறேன். எனினும் பிரிவினைத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துவதற்கு இங்கு இப்போது வந்துள்ளேன். எல்லாக் கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவு இது; காங்கிரஸ் மாத்திரம் வாக்கு மீறினல் நன்ருக இருக்காது. பிரிவினைத் தீர்மானத்தைப் புறக்கணித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு எனக்குச் சக்தி இல்லை. காலப்போக்கில், இந்தியா பாகிஸ்தானிடையே இதய ஒற்றுமையை ஏற்படுத்த முடியும் என நம்புகிறேன்."

பக். 136–137: ஆகஸ்டில் காஷ்மீருக்குக் காந்தி விஜயம் செய்தார். சில தினங்களில் அங்கிருந்து பஞ்சாபுக்குப் புறப்பட்டுவிட்டார். பஞ்சாபில் வகுப்புக் கலகம் மும்முரமாக இருந்தது. இஸ்லாத்தைத் தழுவுவதா அல்லது இறப்பதா என்ற நிலைமை காரணமாக ஏராளமான பேர் மேற்கு பஞ்சாபிலிருந்து அகதிகளாக ஓடிவந்து கொண்டிருந்தனர். அவர்களுக்குக் காந்தி கூறிய புத்திமதி வருமாறு:— "மேற்கு பஞ்சாபிலிருந்து ஜனங்கள் குடிபெயர்ந்து வருகிறுர்கள் என்பதை அறிந்து வேதனைப்படுகிறேன். லாகூர் இறந்துவிட்டதென்றே, இறந்து கொண்டிருக்கிறதென்றே நீங்கள் கருதினல் அங்கிருந்து ஓடிவராமல், செத்துக் கொண்டிருக்கும் அந்நகரத்துடன் நீங்களும் சேர்ந்து சாக வேண்டும்".

பக். 138: 1947 ஆகஸ்டில் இந்தியா பிரிவினை செய்யப்பட்டது. ஆகஸ்ட் 15-ம் தேதி இந்தியாவின் முதலாவது சுதந்திர தினத்தன்று தலைநகரக் கொண்டாட்டங்களில் காந்தி கலந்து கொள்ளவில்லை; ஹிந்து-முஸ்லிம்களிடையே ஒற்றுமை ஏற்படுத்துவதற்காக அவர் அப்போது கல்கத்தாவில் பாடுபட்டுக் கொண்டிருந்தார். அவரது ஜாகைமுன் இரு வகுப்பாரும் சகோதர பாவத்துடன் கட்டித் தழுவிக் கொண்டனர். சுதந்திர தினத்தை அவர் உபவாசத்திலும் நூற்பதிலும் கழித்தார்; சுதந்திர தினச் செய்தி எதையும் அவர் விடுக்கவில்லை.

பக். 139–140: கல்கத்தாவில் பலியாகட்டாவிலுள்ள ஒரு முஸ்லிமின் ஜாகையில் காந்தி தங்கினர். ஹிந்துக்களால் பயமுறுத்தப்பட்ட பிரதேசம் இது. வங்காளப் பிரிவினையைத் தடுப்பதற்காக நேத்தாஜி போஸின்

அண்ணுவாகிய சரச்சந்திர போஸ் அப்போது முயன்று வந்தார். இதற்காக அவர் காந்தியுடன் சம்பாஷணை நடத்தினர்.

வங்காளப் பிரதமராக இருந்தபோது காலித்தனத்தை ஒடுக்கவில்லை என்பதற்காக சுஹ்ரவர்த்திக்குக் கெட்ட பெயர் ஏற்பட்டது. காந்தி அவரை அந்தரங்க சுத்தியுள்ளவர் என்று நம்பி வகுப்பு ஒற்றுமை வேலையில் அவரை ஈடுபடுத்த முயன்ருர். நல்லெண்ண சமிக்ஞையாகக் காந்தியின் ஜாகையில் தாமும் தங்குவதற்கு சுஹ்ரவர்த்தி சம்மதித்தார்.

ஆகஸ்ட் 18உ ஈத் பெருநாளன்று முஸ்லிம்கள் மூவர்ணக் கொடிகளுடன் திரளாக வந்து காந்திக்கு வாழ்த்துக் கூறினர். கல்கத்தா மைதானத்தில் நடந்த ஈத் கொண்டாட்டக் கூட்டத்தில் காந்தி மௌன விரதத்தையும் மீறிப் பேசி, முஸ்லிம்களை வாழ்த்தினர்.

தற்காலிக அமைதிக்குப் பின் கல்கத்தாவில் மறுபடி வகுப்புக் கலவரம் மூண்டது. இதனல் காந்தி நவகாளி செல்வதை நிறுத்தி, செப்டம்பர் 1உ உண்ணு விரதத்தை மேற்கொண்டார். பல்வேறு தலைவர்களும் அரும்பாடுபட்டு வகுப்பு ஒற்றுமையை மீண்டும் நிலைநாட்டினர். இம்முயற்சியில் இரு ஹிந்து ஊழியர்கள் உயிர் இழக்கவும் நேரிட்டது. செப்டம்பர் 4உ காந்தி உண்ணு விரதத்தை முடித்துக் கொண்டார்.

பக்.141–143: கலவரங்களால் சீரழிந்திருந்த பஞ்சாபிலிருந்து காந்திக்கு அழைப்பு வந்தது. பஞ்சாப் செல்லும் வழியில் டில்லிக்கு அவர் விஜயம் செய்தார். பங்கி காலனியில் முன்பு அவர் தங்கியிருந்த கட்டடத்தில் அகதிகள் வசித்து வந்ததால், இம்முறை பிர்லா மாளிகையில் தங்கலானர். அகதி முகாம்களை அவர் பார்வையிட்டதுடன், தினந்தோறும் பிரார்த்தனைக் கூட்டங்களில் உள்ளமுருக்கும் உபதேசங்களைப் போதித்தார்.

டில்லியில் வகுப்பு ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக அவர், "செய் அல்லது செத்து மடி" என்ற சூத்திரத்தைப் பிரயோகித்தார். டில்லியில் அமைதி ஏற்படுத்தி, மேற்கு, கிழக்கு பஞ்சாபுக்குத் தாம் செல்ல வழி செய்யுமாறு அவர் ஜனங்களைக் கேட்டுக்கொண்டார்.

பக்.144–145: 1947 அக்டோபர் 2உ எழுபத்தொன்பதாவது பிறந்த தினத்தன்று ஏராளமான பேர் காந்தியைத் தரிசித்து வாழ்த்துக் கூறினர்; ஏராளமான ஆசிச் செய்திகளும் வந்திருந்தன. ஆனல் காந்தியோ தம் இதயம் வேதனையால் துடிப்பதாகக் கூறினர். துவேஷமும், கொலையும் மலிந்துள்ள சூழ்நிலையில் தாம் உயிர் வாழ விரும்பவில்லை என்றும் அவர் சொன்னர். அவர் மன்றுடிக் கேட்டுக்கொண்ட பிறகும் ஆங்காங்கே பலாத்கார சம்பவங்கள் நடந்து கொண்டிருந்தன. அதனல் 1948 ஜனவரி 13உ முதல் காலவரம்பின்றி உண்ணு விரதம் இருக்கப் போவதாக அவர் அறிவித்தார். பல்வேறு வகுப்பினர் இடையே இதயபூர்வமான ஒற்றுமையை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்றும், எவருக்கும் எதிராக உபவாசத்தை ஆரம்பிக்கவில்லை என்றும் அவர் தெளிவுபடுத்தினர்.

அண்ணல் உபவாசத்தின் விளைவாக டில்லியில் அதிவிரைவில், அதிசய வகுப்பு ஒற்றுமை மலர ஆரம்பித்தது. அவரது கட்டளைப்படி வகுப்பு ஒற்றுமையைக் காத்து நிற்பதாகச் சகாக்கள் வாக்களித்ததன் பேரில் காந்தி, உபவாசத்தை ஜனவரி 18உ முடித்துக் கொண்டார். அதற்கு இரு தினங்கள் கழித்து, பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தி மீது வெடிக்குண்டு வீச ஒரு முயற்சி நடந்தது.

இம்முறை உண்ணுவிரதம் அவரை ரொம்பவும் அசத்திவிட்டது. பிரார்த்தனைக் கூட்டத்துக்கு அவரை 'ஸ்டிரெச்சரில்' தூக்கிச் செல்ல வேண்டியிருந்தது. பிர்லா மாளிகைக் காம்பவுண்டில் பிரார்த்தனைக் கூட்டம் நடந்து வந்தது. ஜனவரி 22உ முதல் அவர் பிரார்த்தனைக்கு நடந்து செல்ல முடிந்தது.

பக்.146–147: ஜனவரி 27உ முஸ்லிம் மகான் ஒருவரின் ஜன்மதினக் கொண்டாட்டம் நடந்தது. அன்று மெஹ்ராலி மசூதிக்குக் காந்தி சென்று ஹிந்து-முஸ்லிம்களின் கலப்புக் கூட்டத்தில் உபதேசம் செய்தார்.

சாந்தியை ஏற்படுத்தவும், அகதிகளின் துயரைத் துடைக்கவும் காந்தி அல்லும் பகலும் பாடுபட்டார். "நான் ஆண்டவரின் திருவுளப்படி வாழ்கிறேன். அவரது ஆக்ஞைப்படி செயல் புரிகிறேன். விரும்பினல் என்னை அவர் கொல்ல முடியும்" என்று காந்தி கூறினர்.

பக. 148–155: ஜனவரி 30உ பக்களை நோக்கிக் கூப்பிய கரங்களுடன் பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போய்க்கொண்டிருந்தபோது, ஒரு ஹிந்து வெறியன் காந்தி மீது கைத் துப்பாக்கியால் சுட்டான்; அவர் திருமேனியில் மூன்று தோட்டாக்கள் பாய்ந்தன. "ஹே ராம்" என்று கூவிக் கொண்டு அண்ணல் விழுந்தார். எங்கும் இருள் சூழ்ந்தது. உலகெங்கும் துக்கத்தின் அடையாளமாகக் கொடிகள் தணிக்கப்பட்டன.

நன்றி அறிவிப்பு

1949 ஜனவரியில் ராஜகட்டத்தில் மஹாத்மா காந்தியின் முதலாவது சிரார்த்த தினக் கொண்டாட்டத்தின் போது ஸர்வோதய தினக் குழவினர் நடத்திய கண்காட்சியிலிருந்து சேகரிக்கப்பட்ட படங்களே இத் தொகுதியில் பெரும்பாலும் உள்ளன. போட்டோக்களைப் பிடித்தவர்கள், அவற்றைத் தந்து உதவியவர்கள் ஆகியோரின் பெயர்களை (எங்களுக்குக் கிடைத்த தகவலை ஆதாரமாகக் கொண்டு) கீழே பிரசுரித்திருக்கிறோம். யாருடைய பெயராவது விட்டுப்போயிருந்தால், சரியான தகவல் கிடைக்காமையே அதற்குக் காரணமாகும். இவ்வாறு விடுபட்டவர்கள் எங்களுக்குத் தகவல் கொடுத்தால் அடுத்த பதிப்பில் பிரசுரிக்கிறோம்.

ராஷ்டிரபதி பவனத்தில் உள்ள சுபகிருஷ்ணுவின் ஓவியத்தை ஆதாரமாகக் கொண்டு இப்புத்தகத்தின் அட்டைப் படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

அம்புஜம்மாள்
அசோஸியேட்டட் பிரஸ் போட்டோஸ்
ஆர். ஆர். திவாகர்
ஆர். வி. சலம்
ஆர். வி. பண்டிட்
இந்தியன் ஒப்பீனியன்
எஸ். எஸ். ஐயர்
எஸ். பாட்டியா அண்டு பிரதர்ஸ்
ஏஷியன் போட்டோஸ்
கனு காந்தி
கமல் குமார்
கமல் நயன் பஜாஜ்
கட்டராக்
காகா சாஹேப் கலேல்கர்
குந்தன்லால்
காப்பிடல் ஆர்ட்ஸ் ஸ்டுடியோ, ஜான்ஜிபார்
கௌஞ்ஜிக் பிரதர்ஸ்
குஜராத் நியூஸ் போட்டோஸ்
கோபால் சித்ரகுடீர்
ஜகன். வி. மேத்தா
ஜம்ஷேத் நௌஷேர்வாஜி
ஜவாஹர்லால் நேரு
ஜெயின் பரோஸ்
டைம்ஸ் ஆப் இந்தியா
டி. எஸ். சத்யன்
டி. காசிநாத்
டி. சுகோடின் டால்ஸ்டாய்
டி. ஆர். டி. வாடியா
டி. பி. மௌலிகர்லா
டாக்குமென்டரி பிலிம்ஸ்
தாரக தாஸ்
தேவதாஸ் காந்தி
பப்ளிகேஷன்ஸ் டிவிஷன்
பிரஸ் இன்பர்மேஷன் பியூரோ
பி. என். கே. மூர்த்தி
பி. என். சர்மா
பி. வி. பதி
பிரஸ் போட்டோ ஏஜன்ட்
பஞ்ச கோஷீ
சங்கீர்த்தன பிரச்சார் சமிதி
பிரஜ கிஷோர் சின்ஹா
வீரேன் சின்ஹா
பகத் பாயீ அண்டு கம்பெனி
மணியம் நடேசன்
மஹாலே பிரதர்ஸ்
மோத்திராம் ஜெயின்
ராஷ்டிரபதி பவன்
லெப். கர்னல் பி. ஜே. பட்
வஜூ ஸி. சேட்
விசுவ பாரதி
வி. ஒய். கோர்படே
ஸ்டேட்ஸ்மன்
சர்வோதய திவஸ் சமிதி
சுசீலா நையர்
சிம்லா ஸ்டுடியோஸ்
ஹிந்துஸ்தான் டைம்ஸ்
ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்ட்
ஹிந்து

*